சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 Fax: 021 - 222 9041, ISSN 1391-7633

மலர் : 142 | இதழ் : 08 | திகதி : 13.05.2018 | விலை : 30.00

இயேசுவின் விண்ணேற்றுப் பெருவிழா

ஏழ்பத்து அகவையில்
வாழ்த்துகின்றோம்

இயேசுவின் விண்ணேற்பு
இறைவாழ்வில் எம்மை
இற்றைப்படுத்தும் ஆதாரம்
மண்ணக வாழ்வில்
மனிதராய் வாழ்ந்து
விண்ணக இன்பம்
நிறைவாய்ப் பெற்றிட
நல்லுள்ளம் கொண்டு
வாழ்வோம் வாழவைப்போம்

பத்திமாநகரில் காட்சிதந்த
பரமனின் திரு அன்னையே!
செபமாலை அன்னை என மொழிந்து
செபம் செய்ய பணித்த தாயே!
உம்வழி ஆண்டவனிடம்
உளம் உருகி நிற்கின்றோம்
திரு அவை திருத்தந்தை பிரான்சிஸ்
எம் ஆயர் யஸ்ரின் ஆண்டகை
திரு நிலையினர் பொது நிலையினர்
எம்மினிய உறவுகள்
ஏற்றமுறு அருள்வாழ்வில்
என்றும் நிலைத்திட
பரலோக தந்தையிடம்
பரிந்துரைக்க வேண்டுகின்றோம்
புனித பற்றிமா அன்னையே!
மாசற்ற உம் திருவுளத்தால்
புலர்க புது உலகம்

எழுகதிரென ஏழ்பத்தில் எழுக!

வைகாசித் திங்கள் பதின்மூன்று
வையகத்தில் ஓர் பிரகாசம்
ஞானப்பிரகாசமாய் ஒளிர்ந்தது காண்!
ஏழ்பத்தில் உங்கள் நாமம்
ஏழிசை கானமென யாழில் ஒலிக்கிறது
தொட்டதெல்லாம் பொன்னாக்கும் அபாரசக்தி
மீட்டதெல்லாம் செயலாக்கும் ஆன்ம சக்தி
இட்டதெல்லாம் உயர்வாக்கும் ஊக்கசக்தி
நட்டதெல்லாம் பயிராக்கும் ஈர்ப்பு சக்தி
பட்டதெல்லாம் வளமாக்கும் தெய்வசக்தி
பக்தியோடு திரு அவைதனையும்
கருணையோடு தமிழினத்தையும்
பல்லாண்டு தாங்கி நின்று
நல்லாயன் தாங்கள்
நலமே வாழ
மரியன்னை வழி ஆண்டவன்
அருள் வேண்டி
வணக்கத்துடன் வாழ்த்துகின்றோம்
எழுகதிரென ஏழ்பத்தில்
எழுக! வாழ்க!

எழுபதாவது ஜனன நாளில் எம் ஆயரை
வாழ்த்தி மகிழ்கின்றோம்
- பாதுகாவலன் குடும்பம் -

" பொதுநிலையினர் நிர்வாக பணிகளில் ஈடுபட முன்வரவேண்டும் "

பொதுநிலையினர் மாநாட்டில் யாழ் ஆயர்

யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக வருடாந்த மாநாடு மே மாதம் 06ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாதுகாவலன் மண்டபத்தில். மறைமாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்பணி. மவுலிஸ் அடிகளாரின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது . காலை 9.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் சிறப்பு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து பாதுகாவலன் மண்டபத்தில் கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. மாநாட்டிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது உரையில் பொது நிலையினர் திருச்சபையில் ஆற்ற வேண்டிய பணிகளை சுட்டிக்காட்டி, பொது நிலையினர் மறைமாவட்ட நிர்வாக பணிகளிலும் ஈடுபட முன்வரவேண்டும் என அழைப்புவிடுத்தார். இந்நிகழ்வில் பொதுநிலையினர் கழகத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கப் பட்டதுடன் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. யாழ் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து மறைக்கோட்டங்களில் இருந்தும் பொதுநிலையினர் கழக அங்கத்தவர்கள் மாநாட்டில் கலந்து சிறப்பித்தனர்.

எமது எண்ணம்

நினைவேந்தல் என்பது நினைவிருக்கட்டும்...

தமிழர்கள் நாம் 2009 மே 18 இல் முள்ளிவாய்க்கால் பேரவலத்தைக் கண்டோம். அனுபவித்தோம். அத்துயரத்திலிருந்து மீள முடியாமல் தமிழர் நாம் தத்தளித்தோம். முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழர்கள் ஞானம் பெற்ற இடம். பல துயர்தோய்ந்த படிப்பினைகளையும், கசப்பான வரலாற்று உண்மைகளையும் வெளிப்படுத்திய முள்ளிவாய்க்கால் தார்மீகம், ஜனநாயகம், மனிதாபிமானம், அகிம்சை பேசிய பலரது முகத்திரைகளையும் கிழித்துக்காட்டிய இடமாகவும் காலத்தில் பதிவாகிறது. இத்தகைய அதிர்ச்சிகரமான வரலாற்றுத்திருப்பத்திலிருந்து தற்போது மெல்ல மீண்டெழுந்து வருகின்றோம்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது முள்ளிவாய்க்காலில் இறந்துபோன மக்களை மட்டும் நினைவுகூரும் ஒரு நிகழ்வன்று. மாறாக தமிழர் தம் போராட்ட வரலாற்றில் ஆகுதியாகிய அத்தனை மக்களையும் நினைவுகூரும் துயர நிகழ்வாகும். மரணித்த மக்களை நினைவுகூருதல், அவர் தம் ஆன்ம இளைப்பாற்றிக்காக பிரார்த்தனை செய்தல், உறவுகளை இழந்து பரிதவிக்கும் மக்களுக்கு ஆறுதல் அளித்தல் என்னும் மும்முனை நோக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபெறுகிறது. நடைபெறவேண்டும்.

இதனை மறந்து, மறுத்து, மறைத்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நிகழ்த்துவது சத்தியவேள்வியில் தம்மை தியாகத்தின் உருவங்களாக உருக்கிய மக்களை இழிவுபடுத்துவதற்கும் அவமானப்படுத்துவதற்கும் சமனாகும்.

ஈழத்தமிழரிடத்தில் நடைபெறும் அத்தனை நிகழ்வுகளுக்கும் பின்னணியில் அரசியல் சாயம் பூசும் ஒரு அவல நிலை தற்போது எம்மண்ணில் நிகழ்ந்தேறி வருவது துரதிஷ்டவசமானது. நியமனங்கள் தொடக்கம் சாதாரண நிகழ்வுகள் வரை ஏதோ ஒரு அரசியல் பின்னணி இருந்து வரும் யதார்த்தத்தை இதய சுத்தியுள்ள எவரும் மறுக்க மாட்டார்கள்.

வலிகளைச் சுமந்து வடுக்களைத் தாங்கி சொல்லொணா வேதனைகளை அனுபவித்து வாழ்வாதாரமற்று வாடி வதங்கும் மக்களின் பிரச்சினைகளை கையிலெடுத்து, தமது சுய இலாபங்களை அடையும் அவக்கேடான ஓர் அரசியல் மாயைக்குள் நாம் மூழ்கடிக்கப்பட்டு வருகின்றோம்.

இத்தகைய அவலம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்குள்ளும் நுழைந்துவிட்டதை நினைக்கும்போது இயேசு கிறிஸ்து திருவாய் மலர்ந்த "உங்களுக்கு ஐயோ கேடு" என்னும் எச்சரிப்புத் தான் நினைவில் நிழலாடுகிறது.

மரணித்த ஆன்மாக்களுக்கான ஒரு நிகழ்வைக்கூட ஒற்றுமையாக எம்மால் நிகழ்த்த முடியாது என்றால் நாளைய சந்ததி நம்மைப் பார்த்து நகைக்கும் என்பதுடன், வரலாற்றில் நாம் தூக்கியெறியப்படுவோம் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது.

கடந்த காலங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை வடக்கு மாகாண சபை முன்னின்று நடத்தியமை அனைவரும் அறிந்ததே. அதற்கு ஒரு உள்நோக்கம் இருக்கிறது எனக் கூறிக்கொண்டு இம்முறை யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மக்களுடன் இணைந்து தாம் முன்னெடுக்கப்போவதாகக் கூறி செயற்பாடுகளிலும் களமிறங்கினர்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பின்னணியில் சில சக்திகள் இயங்குவதாகக் கூறி தாமே இம்முறையும் அதனை நிகழ்த்துவதாக வடக்கு மாகாண சபை கங்கணம் கட்டியதுடன், அதற்கான கூட்டத்தையும் சில பொது அமைப்புக்களுடன் இணைந்து நடத்தியிருந்தது. அக்கூட்டத்தை யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் புறக்கணித்தது.

வடக்கு மாகாண சபை சிறிது காலத்தின் முன்னர் குழப்பம் கண்டபோது இதேபல்கலைக்கழகமாணவர் ஒன்றியம் தான் வடக்கு மாகாணசபைக்கும் முதலமைச்சருக்கும் ஆதரவாக வீதியில் இறங்கிப் போராடியதை எவரும் இலகுவில் மறந்துவிட மாட்டார். இந்நிலையில் இவர்களுக்கு இப்போது என்ன நடந்தது? இதன் பின்னணியில் யார் இயங்குகிறார்கள்? என்பதனை அவசியம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது.

தமிழின அழிப்பின் அடையாளமாக விளங்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை சுய இலாபம் மற்றும் அரசியல் இலாபம் கருதி மரணித்த ஆன்மாக்களை சாந்தியடைய விடாது சஞ்சலப்பட வைப்பவர்கள் கண்டனத்துக்குரியவர்கள். மரணித்தவர்களின் உறவுகளுக்கு ஆறுதல் அளிக்காது அவலத்தைக் கொடுப்பவர்கள் மனிதநேயமற்றவர்கள். அனைவருக்கும் இது நினைவேந்தல் என்பது நினைவிருக்கட்டும்.

புனிதமான இந்நிகழ்வு தன்னலம் கருதுவோரின் காலடிபட்டு கறைபடியாதிருக்கட்டும். "பூக்களை மிதித்துக் கொண்டு கிளைகளுக்கு வர்ணம்பூசவேண்டாம்" என மனிதாபிமானத்தின் பெயரால் கேட்டுக்கொள்கின்றோம்.

அருட்பணி. எஸ். எயின்சிலி றொஹான்

இதழியலில் பொய்மையைக் களைந்து உண்மையைப் பறைசாற்றுவோம்

"உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோவான் 8:32)
போலியான செய்தியும் சமாதானத்திற்கான பத்திரிகைத்துறையும்

உலகத் தொடர்பாடல் தினம் 13 மே 2018

1967ம் ஆண்டு அப்போதைய திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட உலக சமூகத் தொடர்பு நாள ஒவ்வோர் ஆண்டும் தூய ஆவியாரின் வருகைப் பெரு விழாவான பெந்தக்கோஸ்து திரு விழாவுக்கு முந்தைய ஞாயிறன்று சிறப்பிக்கப்படுகிறது. இவ் வருடம் மே மாதம் 13ம் திகதி இவ் உலக சமூகத் தொடர்பு நாள் கொண்டாடப்படுகின்றது. இவ் வாண்டு சிறப்பிக்கப்படும் 52வது உலக சமூகத் தொடர்பு நாளுக் கென திருத்தந்தை பிரான்சிஸ் 'உண்மை உங்களுக்கு விடு தலை அளிக்கும்' (யோவான் 8:32) போலியான செய்தியும் சமாதானத்திற்கான பத்திரிகைத் துறையும் என்ற தலைப்பில் தனது செய்தியை வெளியிட்டுள்ளார்.

திருத்தந்தை தனது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

1. பொய் செய்திகளில் உள்ள பொய்மை என்ன?
2. பொய் செய்திகளை எவ்விதம் அடையாளப்படுத்துவது?
3. உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் (யோவான் 8:32)
4. அமைதியே உண்மையான செய்தி.

என்ற நான்கு பிரிவுகளில் திருத்தந்தை தன் கருத்துக்களைத் தொகுத்து வழங்கியுள்ளார்.

மிகத் துரிதமாக மாறிவரும் சமூகத் தொடர்புகளும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களும் பொய்யான செய்திகளைப் மிக வேகமாக பரப்பி வருகின்றன. உண்மைச் செய்திகளைப் போலவே வேடமிட்டு வரும் பொய் செய்திகள் மக்களுக்குப் பழக்கமான முற்சார்பு எண்ணங்களைச் சுமந்து வருவதால் அவை மக்களால் விரும்பி ஏற்கப்படுகிறது. பொய்ச் செய்திகளுக்கு அதிகாரப்பூர்வமான மறுப்புக்கள் வெளியிடப்பட்டாலும் பொய்யான செய்திகள் மக்களிடையே விரைவில் ஊடுருவிச் செல்கின்றன. சமுதாயத்தில் பழக்கத்தில் இருக்கும் டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தி இத்தகையை செய்திகளை எவ்வித தயக்கமுமின்றி மக்கள் பரப்பி வருவதால் பொய்யான செய்திகளின் வேடம் கலைக்கப்படுவதில்லை.

பொய்ச் செய்திகளின் வேடத்தைக் கலைப்பது எளிதான செயல் அல்ல என்றாலும் பல கல்விக் கூடங்கள் அத்தகையப் பணியைச் செய்து வருகின்றன. உண்மையை உள்ளங்களில் பதிக்கும் கல்வியில் இன்னும் அதிகமான கவனம் செலுத்தப்பட வேண்டும். உண்மை என்பது ஒருவர் தன் வாழ்வில் தொடர்ந்து தேடிவரும் விடயம். பொய் எப்போதும் பிளவுகளையும் மோதல்களையும் உருவாக்கி மக்களைப் பிரிக்கும். உண்மை மக்களை ஒருங்கிணைக்கும். பொய்மையை முறியடிக்க வெறும் செயல் திட்டங்கள் மட்டும் போதாது. மாறாக உண்மையை நோக்கி மக்களை ஒன்றிணைக்க வேண்டும். சமூகத் தொடர்புகள் இந்த உண்மையில் மக்களை இணைக்கும் பணியைச் செய்யவேண்டும். இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் வெறுப்பையும் வன்முறையையும் வளர்க்கும் சொல்லாடலைப் பயன்படுத்தும் இதழியலுக்கு ஒரு மாற்றாக உண்மையை அன்பை பறைசாற்றும் இதழியலை வளர்ப்பது கிறிஸ்தவ சமூகத் தொடர்புக் கலையின் இலக்கணம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் தன் செய்தியில் வலியுறுத்தியுள்ளார். அத்துடன் அமைதியின் கருவியாய் என்னை மாற்றும் என்று அசிசி நகர் புனித பிரான்சிஸ் உருவாக்கிய செபத்தைத் தழுவி, 52வது உலக சமூகத் தொடர்பு நாளுக்கென வெளியிட்டுள்ள செய்தியின் இறுதியில் திருத்தந்தை ஒரு செபத்தை உருவாகியுள்ளார்:

திருத்தந்தை

ஆண்டவரே! உமது அமைதியின் கருவியாக எங்களை ஆக்கியருளும்.

ஒற்றுமையை உருவாக்காத ஒரு தகவல் தொடர்பின் தீமையை நாம் அறிந்துகொள்ள எங்களுக்கு உதவிசெய்யும். எங்கள் தீர்ப்புகளிலிருந்து விஷத்தை அகற்ற எங்களுக்கு உதவும். மற்றவர்களைக் குறித்து சகோதர சகோதரிகளாகப் பேச எங்களுக்கு உதவி செய்யும். நீர் உண்மையும் நம்பகத்தன்மையுடைய வராகவும் இருக்கிறீர். நம்முடைய வார்த்தைகள் உலகில் நன்மையின் விதைகளாக இருக்கட்டும்!

எங்கே கூச்சல் உள்ளதோ அங்கு செவிமடுக்கும் பண்பை வளர்ப்போமாக.

எங்கே குழப்பம் நிலவுகிறதோ அங்கே அமைதியை ஊக்குவிப்போமாக.

எங்கே தெளிவின்மை உள்ளதோ அங்கே தெளிவைக் கொண்டுவருவோமாக.

எங்கே புறக்கணிப்பு உள்ளதோ அங்கே ஏற்றுக்கொள்ளுதலை வழங்குவோமாக.

எங்கே பரபரப்பு உள்ளதோ அங்கே நிதானத்தைக் கடைப்பிடிப்போமாக.

எங்கே மேம்போக்குத்தன்மை உள்ளதோ அங்கே உண்மையான கேள்விகளை எழுப்புவோமாக.

எங்கே முற்சார்பு எண்ணம் உள்ளதோ அங்கே நம்பிக்கையை ஏற்படுத்துவோமாக.

எங்கே விரோதம் உள்ளதோ அங்கே நட்பைக் கொண்டுவருவோமாக. எங்கே பொய்மை உள்ளதோ அங்கு உண்மையைக் கொண்டு வருவோமாக. ஆமென்.

பொதுநிலையினர் குடும்பம், வாழ்வு திருப்பீட அவைக்கு விதிமுறைகள்

பொதுநிலை விசுவாசிகள், குடும்பம் மற்றும் மனித வாழ்வை ஊக்குவிக்கும் நோக்கத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2016ம் ஆண்டில் உருவாக்கிய புதிய திருப்பீடத் துறைக்கு, சட்ட விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

திருப்பீட பொதுநிலையினர், குடும்பம் மற்றும், வாழ்வு அவைக்கு வெளியிடப்பட்டுள்ள புதிய சட்ட விதிம /றைகள், மே 13, பாத்திமா அன்னை விழாவன்று அமலுக்கு வருகின்றன.

தூய ஆவியாரின் பெருவிழா

திருவிழிப்பு ஆராதனை

காலம் :- 19.05.2018 (சனிக்கிழமை)
நேரம் :- இரவு 7.00 மணி முதல் அதிகாலை வரை
இடம் :- யாழ். புனித மடுத்தீனார் குருமட மைதானம்
7.00 மணி: திருச்செபமாலை
7.30 மணி : குருமுதல்வர் தலைமையில் திருவிழிப்பு திருப்பலி தொடர்ந்து ஆராதனைகள்.
அதிகாலை 4.00 மணி : ஆயர் தலைமையில் தூய ஆவியார் பெருவிழாத் திருப்பலி

தூய ஆவியாரின் அபிஷேகம் பெற்று சாட்சிய வாழ்வு வாழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இறைதியாளக் குழுவினர்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

குழுப்பாமாற்ற நிகழ்வு

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான ஒப்புரவு செயற்பாட்டுக் குழுவின் அனுசரணையுடன் நல்லாட்சியை நிலைநாட்டுதல் செயற்றிட்டத்தின் கீழ் காலியைச் சேர்ந்த கொட்டவில் வெலிகமகிராமத்தைச் சேர்ந்த சிங்கள பௌத்த, கிறீஸ்தவ மக்கள் 44 பேர்மற்றும் பிரதேசசெயலர் அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் மூன்றுநாட்கள் நெடுந்தீவு மக்களோடு தங்கி தங்கள் அன்பைப் பகிர்ந்துகொண்டனர். கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வை நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்பணிஎமில் போல் அடிகளாரும் உதவிப் பங்குத்தந்தை அகஸ்ரின் பெர்ணாண்டோஅடிகளாரும் ஒழுங்கமைத்திருந்தனர்.

அகவை எழுபதில் எம் ஆயர்...

அகவை எழுபதில் கால்பதித்து மகிழ்ந்திருக்கும் எம் ஆயர் அவர்களுக்கு இறையாசீர் கூடிய வாழ்த்துக்களை யாழ் மறைக்கோட்ட குருக்கள் சார்பாக தெரிவித்து நிற்கின்றேன். ஆயரின் பணியும், சேவையும் சிறக்கவும் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழவும் இறையாசீர் வேண்டி நிற்பதோடு, அவருக்கும் அவரை மனமுவந்து திருச்சபைக்கு அளித்த அவரது குடும்பத்தினருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். இறையாசீர் உங்களுடன் இருப்பதாக.

அருட்பணி. R.C.X.நேசராஜா
யாழ் .மறைக்கோட்ட முதல்வர்

எழுபது அகவையில் கால்பதிக்கும் எங்கள் அன்பிற்கும், மதிப்பிற்கும், அதிவணக்கத்திற்குமுரிய பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை நெஞ்சார வாழ்த்தி நிற்கின்றேன். இறை மக்களை வழிநடத்துகின்ற பொறுப்பான பணியை ஏற்று, சிறப்புடன் வழிநடத்தி, நல்லாயனாக திகழ்கின்ற எங்கள் ஆயர் அவர்கள் அனைத்து ஆன்மீக நலம்பெற்று நலமுடன் வாழ்ந்து பணியாற்றிட இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

அருட்பணி. ம.யேசுரட்ணம்
இளவாலை மறைக்கோட்ட முதல்வர்

இறைவனின் திருவருளால் அகவை 70 காணும் எம் ஆயரை குருக்கள், துறவிகள், பொது நிலையினரோடு வாழ்த்தி அமைவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். யாழ் மறை மாவட்டம் செழிக்க பெய்த பெருமழையாக ஆயரின் அர்ப்பணிப்பு மிகுந்த சேவைகள் எமது மறைக்கோட்டத்திற்கு நிறைவாக கிடைப்பதையிட்டு இறைவனுக்கும் ஆயருக்கும் நன்றிகளைக் கூறி நிற்பதுடன், எமது ஆயர் பணிவாழ்வில் மறைவாழ்வில் நிறையின்பம் காண இறைவனை வேண்டுகின்றேன்.

அருட்பணி. A.J.யாவிஸ்
பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர்

70 ஆவது அகவையை கொண்டாடும் எமது ஆயர் அவர்களை முல்லை மறைக்கோட்ட குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் சார்பாக வாழ்த்துகின்றேன். ஆயர் அவர்கள் எமது மறைக்கோட்ட வளர்ச்சியில் ஈடுபட்டு ஆன்மீகம், கல்வி போன்ற விடயங்களில் தூரநோக்குடன் திட்டமிட்டு எம்மை வழிநடத்தி வருகின்ற அவரது உயரிய உள்ளத்திற்காக நன்றிகளைத் தெரிவித்து அவரது பணி சிறக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

அருட்பணி. S.A.ஜோர்ஜ்
முல்லை மறைக்கோட்ட முதல்வர்

நல்லாயனே மேவாழ்க

அகவை எழுபதில் அன்னையின் ஆசீரோடும் உள மகிழ்வோடும் கால்பதிக்கும் எமது ஆயரை இறையாசீருடன் இறை-பணியை இவ்வையகத்தில் இனிதே செய்ய கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர், குருக்கள், துறவிகள், இறைமக்கள் இணைந்து மனதார வாழ்த்துகின்றோம். என்றும் உங்கள் நல்லாயன் பணி சிறக்கவும் யாழ் மறைமாவட்ட வளர்ச்சிக்காக எடுக்கும் அனைத்து முயற்சிகளும் நல்ல முறையில் அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

அருட்பணி. J.A.ஜேசுதாஸ்
கிளி. மறைக்கோட்ட முதல்வர்

பின்தங்கிய பிரதேசமாக விளங்கும் தீவகத்தை தங்களது மேய்ப்புப்பணி மாற்றியமைத்துள்ளது. தீவகத்திற்கான சர்வதேச பாடசாலை, ஆலயப் புனரமைப்புக்கள், வாழ்வாதார திட்டங்கள், முதியோர் இல்லம், தொழில்நுட்பக் கல்லூரி போன்ற பல திட்டங்களுக்கு அத்திவாரமிட்டு உள்ளூர் வெளியூர் பார்வைகளை தீவகத்தில் குவிய வைத்தமைக்கு நன்றிகூறி அன்பு நிறை பிறந்தநாள் வாழ்த்துக்களை தீவக குருக்கள், துறவிகள், இறைமக்கள் சார்பாக தெரிவித்து மகிழ்கின்றேன்.

அருட்பணி. ம.டேவிட்
தீவகம் மறைக்கோட்ட முதல்வர்

குருமுதல்வரின் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்

தனது எழுபதாவது அகவையில் இறைவனுக்கு நன்றி கூறும் எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையோடு இணைந்து நாமும் இறைவனைப் போற்றிப் புகழ்கின்றோம். இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக எமது ஆயர் எமது மறைமாவட்டத்தில் ஆற்றி வருகின்ற மேய்ப்புப்பணியில் அவர் திருஅவையின் படிப்பினைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது மேலோங்கி நிற்கிறது எனலாம். பல்வேறு காரணங்களால் எமது மறைமாவட்டத்தில் இதுவரைகாலமும் உதாசீனம் செய்யப்பட்ட, அல்லது கடைப்பிடிக்கப்ப டாமல் இருந்து வந்த திருஅவையின் பல முக்கியமான படிப்பினைகளை அல்லது ஒழுங்கு முறைகளை ஆயர் அவர்கள் இக்குறுகிய பணிக்காலத்தில்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

70வது அகவையை நினைவுகூரும் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு அமலமரித்தியாகிகளின் சபை சார்பில் எமது மனமுவந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். கடந்த 70 ஆண்டுகளாக எம் ஆயருடைய வாழ்வினூடாக ஆண்டவர் செய்த அனைத்து நற்காரியங்களிற்காகவும் நன்றி கூறுகின்றோம். ஆயர் அவர்கள் கடந்த காலத்திலும் தற்போதும் அமலமரித்தியாகிகளின் பணிவாழ்விற்கு ஆதரவாக இருப்பதையிட்டு இறைவனுக்கு நன்றி சொல்கின்றோம்.

மக்களின் தேவையறிந்து செயற்படும் நல்லதொரு ஆயனாக இறையருளால் நீண்ட ஆயுளைப் பெற்று இறைவழியில் எம்மக்களை வழிநடத்தவும், இறையரசின் மகிமைக்காக அவர் எடுக்கும் எல்லா முயற்சிகளும் வெற்றிபெறவும் இறையருளை நிறைவாக இறைஞ்சுகின்றோம்.

அருட்பணி. எட்வின் வசந்தராஜா, அமதி
அமலமரித்தியாகிகள் சபை மாகாண முதல்வர்.

செபமாலை தாசர் சபையினரின் வாழ்வில் என்றும் அதீத பற்றும் பாசமும் கொண்டு எம்மை இறைபணியில் அர்ப்பணிப்புடன் வாழ அயராது ஆன்மீக வழிகளைக் காட்டு நல்ல ஆயனே உமது 70 வது அகவையில் உம் பாரிய பணி சிறக்க செபங்கள் நிறைந்த வாழ்த்துக்கள்

அருட்பணி. எம்.நிர்மலராஜ்
அருள் ஆச்சிரமம்

அகவை 70 இன் நிறைவில் இறைமக்களின் விசுவாச வாழ்வுக்கும், பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிதனை நினைத்து இறைபுகழ் பாடுகிறேன். ஆயரை மனமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

அருட்பணி. T.J.கிருபாகரன்–அதிபர்
புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடம்

"நல்லது செய்ய வேண்டும் என்பதை கொள்கையாக ஏற்றுக்கொள்; அதில் துன்பத்தை சந்தித்தாலும் பின்வாங்காதே" என்ற பொன்மொழிக்கு ஏற்ப வாழ்ந்து இன்று பிறந்த நாளை நினைவு கூருகின்ற நீங்கள் இன்ப துன்பங்களை இயேசுவின் பொருட்டு ஏற்றுக்கொண்டு தொடர்ந்தும் நல்லதை மறைமாவட்டத்திற்காகவும் இறைவனின் மகிமைக்காகவும் செய்ய, இந்நன் நாளில் உங்களை வாழ்த்தி மகிழ்கின்றேன்.

அருட்பணி. வ.அலன் –அதிபர்
உருவாக்கல் நிலையம்
திருவுளச்சபை (IVD)

அகவை ஏழு பத்தில் அகமகிழும் ஆயர் பெருந்தகையே உங்கள் பணி வாழ்வில் இறைவனின் அன்பையும், பரிவையும், பண்பையும் தொடர்ந்து யாழ் மறை மாவட்டத்திற்கும் ஏனைய திசைகளுக்கும் தளராமல் எடுத்துக்காட்ட கிளரீசியன் சபையினர் சார்பாக உங்களை உடல், உள நலத்தோடு மகிழ்வின் நற்செய்தியை தொடர்ந்து பறைசாற்ற வாழ்த்துகின்றேன்.

அருட்பணி. எஸ்.றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன்
மாகாண முதல்வர் கிளறேசியன் சபை

தனது வாழ்வுப் பயணத்தில் 70 ஆவது அகவையின் நிறைவை மகிழ்வோடும் நன்றியோடும் கொண்டாடும் மதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய யாழ் ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்களை இதய நிறைவுடன் வாழ்த்தி, இறை அருளை ஆசிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மரியன்னையின் மேல் கொண்ட ஆழ்ந்த பக்தியும், இலட்சியப்பாதையில் தூரநோக்கும், அயராத சேவையும், உறுதியான விசுவாச வாழ்வும் எமது ஆயர் அவருக்கே உரித்தான சிறப்பான பண்பாகும்.

யாழ் திருஅவையை இயேசு கிறிஸ்துவின் வாழ்வை நோக்கி விசுவாசத்தில் வழிநடத்தும் இவ்வுன்னத பணியில் இறையாசீர் நிறையப்பெற்று பயணிக்க திருக்குடும்ப சகோதரிகளின் நிறைந்த ஆசிகளையும் செபத்துடன் கூடிய வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

அருட்சகோதரி. கிறிஸ்ரா மரியதாஸ்
மாகாணத்தலைவி, திருக்குடும்ப சபை.

ஆயர் அவர்களின் 70 ஆவது பிறந்த தினத்தில் வாழ்க வளமுடன் என திருச்சிலுவை கன்னியர் சபையினர் சார்பாக வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

தாங்கள் தங்களது 70 ஆவது அகவையில் 44 ஆவது குருத்துவ ஆண்டை நிறைவு கண்டு மூன்றாவது ஆயத்துவ ஆண்டில் பயணிக்கிறீர்கள். தூர நோக்குடன் விரைவாகவும் துணிவாகவும் காலத்தின் தேவை கருதி தாங்கள் ஆற்றும் பணிகள் போற்றுதலுக்குரியவை. தமிழ் மக்களின் துன்ப துயரங்களை நீக்குவதற்கு தாங்கள் கொடுக்கும் குரலும், விடுக்கும் அறிக்கைகளும் காத்திரமானவை. கடந்த மூன்று ஆண்டுகளில் தாங்கள் ஆற்றியுள்ள பணிப்பட்டியலை பார்க்கும் போது மிககுறுகிய காலத்தில் தாங்கள் நிறையவே விதைத்துள்ளீர்கள். அறுவடையின் போதுதான் தங்களின் துணிவான பணியின் கனிகளை யாழ் மறை மாவட்டம் பெற்றுக்கொள்ளும். இறையாசீர் வேண்டி தங்களை வாழ்த்துகின்றோம்.

அருட்சகோதரி. சுவானி கிளேயா
மாகாண தலைவி
திருச்சிலுவை கன்னியர் சபை

தனது 70 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் எமது ஆயருக்கு பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வு அடைகின்றேன். அவர் எனக்கு ஆயர் மட்டுமல்ல, புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராக நான் கடமையாற்றிய காலத்தில் நல்ல அதிபராகவும் வழிகாட்டியாகவும் இருந்தார் என்ற மட்டில் வாழ்த்துக் கூறுவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றேன். ஆயர் தன் அர்ப்பணிப் புள்ள பணிவாழ்வை என்றும் இறை ஆசீருடன் தொடர வாழ்த்துவதோடு, பல்லாண்டு இறைபணி தூதனாய் வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

அருட்சகோதரி. ஜொய்ஸ் மாறி
யாழ். கார்மேல்மடத் தலைவி

வயலாக நாமெல்லாம் நல் விளைச்சல் பெற்றிட வரம்பாக நீரானீர். அணையாத ஆன்மீக தாகம் கொண்டு தீட்டிய திட்டங்கள் வெற்றி பெற அர்ப்பணமானீர். உயர்ந்த உம் தோற்றத்துள் ஆளுமையின் உயர்வு கண்டோம். திரு அவை செழிப்புறவே மேலும் தங்கள் ஆட்சி நீட்சி பெற அகவை எழுபதில் வாழ்த்தும்

திருமதி. றெஜினா இருதயநாதன்
ஓய்வுநிலை வலயக் கல்விப்பணிப்பாளர்

எழுபதில் பாதமிடும்
எழுகைமிகு ஆயரே!
தங்கள் உள்ளம் உண்மையானது
தங்கள் வாக்கு இனிமையானது
தங்கள் செயல் தூய்மையானது
தங்கள் வாழ்வு தெய்வீகமானது
நல்லாயன் தங்களை
நலம் பெற வாழ்த்தி
நயந்தோம் வாழ்க!

இ.இ.வசீகரன்
(ஆசிரியர்)

வாழ்த்தி மகிழ்கின்றோம் இறையாசீருடன்

காவலன் கலசம்

செபமாலையை நாம் எப்படி செபிக்கின்றோம்?

நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது அருட்தந்தை ஒருவர் தினந்தோறும் செபமாலை சொல்வதாக வாக்குப்பண்ண விரும்பிய வர்களை அவ்வாறு செய்யுமாறு அழைத்தார். நானும் வாக்குப் பண்ணினேன். அன்று முதல் ஒவ்வொரு நாளும் நான் செபமாலை செபித்து வந்திருக்கிறேன்.

நான் வாக்குப்பண்ணியபடியே செபமாலை சொல்லி வந்தேன். பெரும்பாலும் அது மனதில் சிந்தனையின்றி வார்த்தைகளை வெறுமனே சொல்வதாக இருந்தது.

வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பின் நிகழ்ந்த இறையியல், ஆன்மீக புதுப்பித்தலுடன் செபமாலை என்பது சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லும் அரத்தமற்ற செபம் என்று சிலர் குறை கூறலாயினர். வார்த்தைகளில் கருத்துச் செலுத்துவது கடினமாயிருந்த போதிலும் நான் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

முதலாவது:
எளிமையானது. ஆனால், ஒரு விதத்தில் மிகக்கடினமானது. ஒவ் வொரு செபத்தையும் ஒவ்வொரு வரியையும் ஒவ்வொரு சொல்லையும் செபிப்பதில் தான் இது அடங்கியுள்ளது. எமது செப வாழ்வில் ஆடம்பரத்தைக் காட்டிக்கொள்ளும் நாம் செபமாலை ***"எளிய மக்கள் செபிப்பதற்கான இலகுவான வழி"*** . திருப்பாடல்களுக்குப் பதிலாக பயன்படுத்தப்படுவது என்பதை மனதிற்கொள்ள வேண்டும். செபமாலையின் தோற்றம் பற்றிய மிகுந்த சான்றாதாரமுடைய நியாயமான வரலாற்றின்படி சந்நியாச மடங்களிலுள்ள துறவறச் சூழலைச் சாராத உறுப்பினர்கள் செபிப்பதற்கு உதவுவதற்காகவே செபமாலை ஆரம்பிக்கப்பட்டது. துறவிகள் தினந்தோறும் வாசித்து வந்த திருப்பாடல்களை அவர்கள் வாசிக்க முடியவில்லை. ஆகவே அவர்கள் 150 "அருள் நிறைந்த மரியாயே" செபித்தனர். பின்னர் அவர்களுக்கு அதை இலகுவாக்கும் படியாக 150 செபங்களும் 15 பத்துக்களாக (காரணிகளாக) பிரிக்கப்பட்டன. பின்னர் இவை மூன்று 5 பத்துக்களாக (காரணிக்கங்களாக) பிரிக்கப்பட்டன.

செபமாலை செபிப்பதில் இந்த முதலாவது எளிமையான ஆனால் மிகக் கடினமான முறை வறிய,

அருட்பணி
மா.றேஜிஸ் இராசநாயகம்

எளிய, எழுத்தறிவற்ற அல்லது அதிகம் படிக்காத பக்தியுள்ள கத்தோலிக்கருக்கு மிகப் பொருத்தமானதாகும்.
ஒரு வைத்தியசாலையில் இப்படிப் பட்ட ஒருவரைச் சந்தித்தது நினைவிருக்கிறது. அந்த மூதாட்டி மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். "சுவாமி, எனக்கு மனமே சரியில்லை ஒரு காரணிக்கம் சொல்வதற்கு எனக்கு அரை மணித்தியாலம் எடுக்கிறது" என்றாள். "எனக்கு அப்படிச் செபிக்க முடிந்தால்!" என்று நான் நினைத்தேன்.

இரண்டாம் முறை :
காரணிக்கத்துக்குரிய மறைபொருளை அல்லது மறையுண்மையைத் தியானித்து அதனுடன் தொடர்புடைய ஒரு விசேட அருளுக்காக அல்லது உதவிக்காக செபிப்பதாகும். உதாரணமாக முதல் மகிழ்ச்சிக் காரணிக்கத்தில் மரியாயின் இறை சித்தத்திற்கு பணியும் புண்ணியத்தை வேண்டுகிறோம்.

மூன்றாவது முறை:
வார்த்தைகளையோ எண்ணங்களையோ கருதாமல் இறைவனோடு நாம் ஒன்றிப்பதற்கு செபமாலையைப் பயன்படுத்துவதாகும். இதைத்தான் ஒரு விதமான தியானம் எனலாம். "சில வேளைகளில் காரணிக்கத்துப் பதிலாக அதற்குப் பொருத்தமான விவிலியப் பகுதியை வாசிப்பதுண்டு" என லெஸ்ஸர் என்னும் அருட்தந்தை தனது செபமாலைப் பக்தியின் அனுபவம் பற்றி எழுதுகின்றார்.

நாமும் செபமாலை அர்த்தமுள்ள விதமாகச் செபிப்போமா?

என்றுமே நன்மை செய்பவர்

"அன்பருக் கன்பனான மெய்யன் ஐய்யன் ஆனந்த மோனன் அருட்குரு நாதன்"
- தாயுமானவர்.

என்றுமே நன்மை செய்பவராய், எல்லோ ரையும் அன்பு செய்பவராய் இருப்பவரே நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து. "நன்ன யம் செய்வோருக்கு மட்டுமன்றி இன்னா செய்வோருக்கும் நல்லவராய் இயங்கு பவரே இவர்".

ஏழை ஒருவர் மிகவும் பசியுற்ற நிலையில் அரண்மனை மாதோட்டத்துள் புகுந்து மாமரம் ஒன்றிற்கு கல்லால் எறிந் தான். இரண்டு மாங்கனிகள் அவனுக் குக் கிடைத்தன. அதேவேளை தற்செய லாக அங்கு நின்ற அரசனின் தலையை அவன் எறிந்த கல் காயப்படுத்திற்று. காவலர்கள் அவனைப்பிடித்து அரசனிடம் கையளித்து தக்க தண்டனை கொடுக்கு மாறு கோரிக்கை விடுத்தார்கள். அர சனோ புன்சிரிப்புடன் தன்மேல் கல்லெ றிந்த அவனுக்கு மாமரம் இரண்டு மாங்கனிகள் கொடுத்துவிட்டது. இம்மாம ரத்தையும்விட மிகவும் மேலானவனா கிய நான் என் தகுதிக்கு ஏற்றவாறு பரிசு கொடுக்கவேண்டாமா? என்று கூறி கல்லால் எறிந்து தன்னைக் காயப்படுத் திய அந்த ஏழைக்கு நிறையப்பரிசுகள் கொடுத்து அனுப்பினான். ஏழை மனிதன் மிகவும் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினான்.

இந்த அரசனையும்விட மிகவும் மேலான முறையிலே இயேசு எம் மேல் அன்பு கொண்டவராக, பரிவுகாட்டுபவராக இருக்கிறார். ஒருமுறை இயேசு, பரி சேயன் சீமோனது வீட்டிற்கு விருந்தாளி யாகச் சென்றார். அவ்வேளை பாவிப் பெண்ணொருத்தி, இயேசு அங்கிருப் பதை அறிந்தவளாய் செல்கின்றாள். இயேசுவிற்குப் பின்னால் கால்மாட்டில் வந்து அவள் அழுது கொண்டே நின் றாள். அவரது காலடிகளைத் தன் கண் ணீரால் நனைத்து, தன் கூந்தலால் துடைத்து தொடர்ந்து முத்தமிட்டு அவரது காலடிகளில் நறுமணத்தைலம் பூசினாள்.

இதைக்கண்ணுற்று, சீமோனோ இயேசுவைத்தவறாகப் புரிந்து கொண் டார்.இயேசு அவரைப் பார்த்து "சீமோனே, நான் உமக்கு ஒன்று சொல்ல வேண்டும்" என்றார். அதற்கு சீமோன், "போதகரே சொல்லும்" என்றார். அப்பொழுது இயேசு, "கடன் கொடுப்பவர் ஒருவரி டம் ஐந்நூறு தெனாரியமும் மற்றவர் ஐம்பது தெனாரியமுமாக இருவர் கடன் பட்டிருந்தனர். கடனைத் தீர்க்க அவர்க ளால் முடியாமல் போகவே இருவர் கட- னையும் அவர் தள்ளுபடி செய்து விட்டார். இவர்களுள் யார் அவரி டம் மிகுந்த அன்பு செலுத்துகிறார்?" என்று கேட்டார். சீமோன் மறுமொழியாக, "அதிக கடனை யாருக்கு தள்ளுபடி செய்தாரோ அவரே என நினைக்கின்றேன்" என்றார். இயேசு அவரிடம் "சொன்னது சரியே" என்றார். அவர் பின்பு அப்பெண் பக்கம் திரும்பி சீமோனிடம், "இவரைப் பார்த்தீரா? நான் உம்முடைய வீட்டிற்கு வந்தபொழுது நீர் என் காலடிகளை கழுவ தண்ணீர் தரவில்லை. இவரோ தம் கண்ணீரால் என் காலடிகளை நனைத்து அவற்றைத் தமது கூந்தலால் துடைத்தாள். நீர் எனக்கு முத்தம் கொடுக்கவில்லை. இவரோ நான் உள்ளே வந்தது முதல்

அருட்கலாநிதி வின்சன்ட் பற்றிக் (அமதி)

என் கால்களை ஓயாமல் முத்தமிட்டுக் கொண்டே இருக்கிறார். நீர் எனது தலை யில் எண்ணை பூசவில்லை. இவரோ என் காலடிகளில் நறுமணத்ததைலம் பூசினார். ஆகவே நான் உமக்குச் சொல் கின்றேன். இவர் மிகுதியாக அன்பு கூர்ந்தார்" (லூக் 7:36-47).

இயேசு சென்ற இடமெல்லாம் நன்மை செய்துகொண்டே சென்றார். மனிதனுக்கு நலம் கொடுப்பதிலேயே அவரது பேச்சும் மூச்சும் இருந்தது. அவ ரது சிந்தனை சொல், செயல், அவரது வாழ்க்கை முறை அனைத்தும் மனித நலத்தை மனித இரட்சிப்பை மையப் படுத்தியதாய் இருப்பதை நாம் அவதா னிக்கலாம். அவர்கள் மறுகரைக்குச் சென்று கெனசேரத்து பகுதியைஅடைந்து படகைக் கட்டி நிறுத்தினார்கள். அவர்கள் படகைவிட்டு இறங்கிய உடனே மக்கள் இயேசுவை இன்னார் என்று கண்டு ணர்ந்து அச்சுற்றுப்பகுதி எங்கும் ஓடிச் சென்று அவர் இருப்பதாகக் கேள்விப்பட்ட இடங்களில் எல்லாம் நோயாளர்களை படுக்கையில் கொண்டு வரத்தொடங்கி னார்கள். மேலும் அவர் சென்ற ஊர் கள், நகர்கள், பட்டினங்கள் அனைத் திலும் உடல் நலம் குன்றியோரை பொது இடங்களில் கிடத்தி அவருடைய மேலு- டையின் ஓரத்தையாவது அவர்கள் தொட அனுமதிக்குமாறு அவரை வேண்டி னார்கள். அவரைத் தொட்ட அனைவரும் நலமடைந்தார்கள் (மாற்கு 6:35).

கடவுள் நாசேரத்து இயேசுவின் மேல் தூயஆவியாரின் வல்லமையை பொழிந் தருளினார். கடவுள் அவரோடு இருந்த தால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டி



ருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றார் (திருப்பணி 10:38).ஆள் பாராமல், நாள்பாராமல் இயேசு என் றும் நன்மை செய்து கொண்டு எல்லோ ருக்கும் நற்செய்தியாக சென்றார். பதி னெட்டு ஆண்டுகளாக பேயினால் நோயுற்றிருந்த கூனிப்பெண்ணை ஒய்வு நாளில் குணமாக்கினார். ஆனால் ஒய்வு நாளில் குணப்படுத்தியதைக் கண்ணுற்ற தொழுகைக் கூட தலைவரோ கோப வெறி கொண்டு மக்கள் கூட்டத்தைப் பார்த்து "வேலை செய்ய ஆறு நாட்கள் உண்டு. அந்நாட்களில் வந்து குணம் பெற்றுக்கொள்ளுங்கள் ஒய்வு நாளில் வேண்டாம்" என்றார். ஆண்டவரோ "வெளிவேடக்காரரே நீங்கள் ஒவ்வொரு வரும் ஒய்வு நாளில் தம் ஆட்டையோ. கழுதையையோ தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டு போய் தண்ணீர் காட்டுவதில்லையா? பாருங்கள் ஆபிர காமின் மகளாகிய இவரை பதினெட்டு ஆண்டுளாக சாத்தான் கட்டி வைத்திருந்தான். இந்தக் கட்டிலிருந்து அவரை ஒய்வு நாளில் விடுவிப்பது முறையில்லையா?" என்று கேட்டார் (லூக்கா 13:14-17).

சொல்லளவில் நல்லவர்கள் என பெயர் பெற்றுக்கொண்டு செயலள வில் பிறருக்குத் தீங்கு செய்வதில் நல்லவர்களாக திகழ்ந்தார்கள் பரிசேயர் கள்.

பரிசேயர்கள் பற்றிய கதை ஒன்று. இந்த உலகில் பத்து நல்லவர்கள் இருக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அவர்களுள் நானும் எனது மகனும் நிச்சயமாக இடம்பெறு வோம். அதே வேளை இந்த உலகத்தில் இரு நல்லவர்கள் உள்ளார்கள் என வைத்துக்கொள்ளுவோம். அப்படியானால் அந்த இரு நல்லவர்கள் நானும் எனது மகனுமாகத்தான் இருக்க முடியும். மேலும் இந்த உலகில் நல்லவர் ஒரு வர் தான் உள்ளார் எனில் நிச்சயமாக அந்நல்லவர் நானாகத்தான் இருக்கமுடி யும் என்று பரிசேயன் பெருமையாகப் பேசிக்கொள்வான். பரிசேய மனப்பான் மையும் பரிசேய செயற்பாடுகளும் இயேசுவிற்கு புறம்பானவையே.

ஒய்வு நாள் அன்று இயேசு பரிசேயர் தலைவர் ஒருவடைய வீட்டிற்கு உணவு அருந்த சென்றிருந்தார். அங் கிருந்தோர் அவரைக் கூர்ந்து கவனித் தனர். அங்கே நீர்கோவை நோயுற்ற ஒருவர் அவர் முன் இருந்தார். இயேசு திருச்சட்ட அறிஞர்களைப் பார்த்து "ஒய்வு நாளில் குணப்படுத்துவது முறையா? இல்லையா?" என்று கேட்டார். அவர் கள் அமைதியாக இருந்தனர். இயேசு அவரது கையைப்பிடித்து அவரை நல மாக்கி அனுப்பி விட்டார். பிறகு அவர் களை நோக்கி "உங்களுள் ஒருவர் தம் பிள்ளையோ மாடோ கிணற்றுள் விழுந்தால் ஒய்வு நாள் என்றாலும் அதனை உடனே தூக்கிவிடமாட்டாரா?" என்று கேட்டார். அதற்கு பதில் சொல்ல அவர்களால் இயலவில்லை

(லூக்கா 14:1-6).

உள்ளத்தால், உணர்வுகளால் பிறரது நல்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்வில் இன்பம் கண்டார் இயேசு. மகிழ்வித்து மகிழும் நல்லுள்ளமாக, வாழ்வித்து வாழும் உலக மீட்பராக விளங்கினார் இயேசு.

யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
பின்னணி, தோற்றம், வளர்ச்சி

செமேரியா அ.ம.தி. அடிகளின் ஆயரின் வலது கரமாக, செயலராக (குருமுதல்வராக) பணி

(சென்றவாரத் தொடர்ச்சி...)

செமேரியா அ.ம.தி. அடிகளுக்கும் அவருடன் வந்த அமலமரித்தியாகிகள் சபைக் குருக்களுக்கும் வடக்குக்கிழக்கு மக்களின் தாய் மொழியாகிய தமிழைக்கற்க வேண்டிய தேவையிருந்ததால் அதில் தமது கவனத்தைச் செலுத்தினர். ஐரோப்பிய மொழிகளிலிருந்து தமிழ் முற்றிலும் வேறுபட்டிருந்தமையால் தமிழைக் கற்பது அவர்களுக்கு ஒரு சுலபமான விடயமாக இருக்கவில்லை.

வடக்கு (யாழ்ப்பாண) திருத்தூது மாவட்டத்தில் ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருந்த கோவா ஒரட்டோரியன் சபைக் குருக்களின் முழுமையான ஒத்துழைப்பின்றி மாவட்டத்தை நிர்வகிக்கப் பல சிக்கல்களை எதிர்கொண்டு வந்த ஆயர் பெற்றக்கீனிக்கு செமேரியா அ.ம.தி. தலைமையில் வந்த அமலமரித்தியாகிகளது வருகை ஒரு பெரும் வரப்பிரசாதமாகவேயிருந்தது. அமலமரித்தியாகிகள் குழுத்தலைவராகிய செமேரியா அடிகள் தாமதமின்றி ஆயரின் செயலராக பெற்றக்கீனி ஆண்டகையால் நியமனம் பெற்றார். இப்பொறுப்பு குரு முதல்வரின் பொறுப்பையொத்ததாகயிருந்தது. ஆயர் பெற்றக்கீனியின் கடிதத் தொடர்புகள் மட்டுமல்ல மற்றும் மேய்ப்புப் பணி சம்பந்தமான மடல்கள் மற்றும் சுற்றுமடல்களை வரையும் பொறுப்பையும் இவரே பெருமளவுக்குச் செய்யவேண்டியிருந்தது. இப்பணியில் இவர் பெற்றிருந்த ஆழமான இறையியல் அறிவும், மேய்ப்புப்பணி சார் அனுபவங்களும் துணைநின்றன.

செமேரியா அ.ம.தி. அடிகளின் யாழ் நகரப்பணி ஆரம்பம்

அந்நாட்களில் யாழ்நகர மறைத்தளம் யாழ் நகரையும் அதனையண்டியுள்ள கிராமங்களையும் உள்ளடக்கியதாயிருந்தது. 1848ம் ஆண்டு செப்ரெம்பர் 8ம் திகதி கீற்றிங் அ.ம.தி. (Fr.Keating, O.M.I.) அடிகளாரைத் தமது உதவிப்பங்குத் தந்தையாக 17 ஆலயங்களை உள்ளடக்கிய யாழ் நகர மறைத்தளத்தைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அவற்றுள் முதன்மையானவை,

1) நகரில் உள்ள முதன்மை ஆலயம் புனித மரியாள் பேராலயம் (St.Mary's Cathedral);

2) குருநகர் புனித யாகப்பர் ஆலயம்.

3) நகரின் மத்தியில் உள்ள அடைக்கல அன்னை ஆலயம் (O.L.R)

4) நாவாந்துறையில் உள்ள புனித நீக்கிலஸ் ஆலயம்

5) நவாலியிலுள்ள புனித பேதுருவானவர் ஆலயம்

6) பாஷையூரில் உள்ள புனித அந்தோனியார் ஆலயம்

7) சுண்டிக்குளியிலுள்ள புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் ஆகியவை அத்துடன் கடற்கரையோரமாக அமைந்துள்ள மன்னார் மறைத்தளம் வரையிலான ஆலயங்களும் இவரது பராமரிப்புக்குட்பட்ட ஆலயங்களாயிருந்தன.

செமேரியா அ.ம.தி. அடிகள் எதிர் கொண்ட சவால்கள் பற்றிய அவரது உணர்வலைகள்

செமேரியா அ.ம.தி. அடிகளின் குறிப்புக்களின்படி தெற்கில் மட்டுமல்ல வடக்கு (யாழ்) திருத்தூது மறைமாவட்டத்திலும் ஒவ்வொரு குருவின் பொறுப்பிலும் 10-40 பங்குகள் (ஆலயங்கள்) இருந்தன. ஒவ்வொரு ஆலயத்தையும் அதற்குப் பொறுப்பான குரு வருடத்தில் ஒரு முறை தரிசிப்பதற்கு அவகாசம் கிடைப்பதே அரிதாகவிருந்தது எனலாம். இதன் விளைவாக அவ்விடங்களில் உள்ளவர்களுக்குப் போதுமான ஆன்மீக பராமரிப்பு கிடைத்தது என்று சொல்லமுடியாது. ஆன்மீகப் பராமரிப்புப் பணியை ஆரம்பிப்பதற்கு முன்னதாக 150 வருடகால ஒல்லாந்தருடைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கலாபனைகளால் ஏற்பட்ட அழிவுகளைச் சீர்செய்யவும் அதன் பின் வந்த 50 வருடகால போதிய ஆன்மீக பராமரிப்பின்மையினால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டியிருந்தது. பழைய கத்தோலிக்கர் வெளியரங்கமான கொண்டாட்டங்களுக்கும், திருநாள் ஆடம்பரங்களுக்கும் மட்டுமே

அருட்பணி S.V.B. மங்களராஜா

முக்கியத்துவம் கொடுக்கின்றவர்களாகவும் திருமுழுக்கு, திருமணம் ஆகிய திருவருட் சாதனங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கின்றவர்களாகவும் இருந்து வந்தனர். 1850ம் ஆண்டு அலங்கைக்கு வந்த ஜோசப் விவியா (அ.ம.தி) (Fr. Joseph Vivier O.M.I.) இங்குள்ள கத்தோலிக்கர் பற்றி குறிப்பிடும் போது தாம் பணி ஆற்றிய பல இடங்களில் இருந்த கத்தோலிக்கர் பலருக்கு திருச்சிலுவை அடையாளம் வரையத் தெரியாது என்றும் கிறிஸ்து யார் என்று சரியான விளக்கம் கொடுக்க முடியாது இருந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் கல்வினிசம் மற்றும் பிரிவினை சபைகளின் ஊடுருவல்களிலிருந்தும் மக்களைக் காக்க வேண்டிய தேவையும், பூதாகரமாக உருவாகிக்கொண்டிருந்த கோவாப்பிரிவினையிலிருந்து மக்களைக் காக்க வேண்டியுமிருந்தது. செமேரியா அ.ம.தி. அடிகளின் கருத்துப்படி புதிதாக ஒரு கத்தோலி சமூகத்தை உருவாக்குவதை விட ஏற்கனவே உள்ள சமூகத்தை ஆபத்துக்களிலும், தேக்க நிலையிலுமிருந்து காப்பாற்றி அவற்றுக்குப் புத்துயிரூட்டுவது சிரமமான பணியென்பது குறிப்பிடத்தக்கது. மக்களுடன் நல்லுறவை வளர்ப்பதற்கும், அவர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் அவர்களது மொழியை (தமிழை) தாமும் மற்ற அமலமரித்தியாகிகள் சபையினரும் நன்கு கற்று ஓரளவு பாண்டித்தியம் பெறுவதும் தேவையென்பதை உணர்ந்து தமிழைக் கற்பதில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டனர். முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இவ்விடத்தில் வடக்கு (யாழ்) திருத்தூது மாவட்டத்தில் செமேரியா அ.ம.தி. அடிகள் குழுவினரின் வருகையுடன் ஏற்பட்ட மறைபணியாளர்களிடையே, குறிப்பாக செமேரியா அ.ம.தி. அடிகளுக்கும் ஆயர் பெற்றக்கீனிக்கும் மற்றும் செமேரியா அடிகளுக்கும் கோவா ஒரட்டோரியன் சபையினருக்கும், செமேரியா அடிகளுக்கும் இயேசு சபையினருக்கும், செமேரியா அடிகளுக்கும் மற்றத் துறவற சபையினருக்கும் இடையே உறவுகளில் ஆங்காங்கே சில சந்தேகங்களும் புரிந்துணர்வின்மையும் நிலவியமை பற்றியும் செமேரியா அ.ம.தி. அடிகள் எவ்வாறு இவற்றைச் சமாளித்து வந்தார் என்பது பற்றியும் மேலும் சில அவதானிப்புக்களைக் குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும்.

(தொடரும்...)

சுய கட்டுப்பாட்டில் நாம் பெறும் வெற்றிகள்

அருட்சகோதரி றோமலா அன்ரனி HC

நம்மை நாமே நிர்வகித்து சுய கட்டுப்பாட்டுடன் வாழ்கின்ற தன்மை மனித வாழ்வில் அதிமுக்கியமானது. ஒவ்வொரு மனிதனும் தனது மதி நுட்பத்தால் பல்வேறு விந்தைகளைச் செய்ய முன், தனது மனதினை அடக்கியாண்டு தனது உள்ளுணர்ச்சிகளை நெறிப்படுத்தும் திறன் கொண்டவனாக இருக்க வேண்டும். இதனால் பல வெற்றிகளை இவ்வுலகில் பெற முடியும். இதற்கு எமது மனதினை அலையவிடாது ஒரு நிலைப்படுத்தி எமது செயலாற்றலை வெளிப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

சுயகட்டுப்பாட்டை நாம் ஏற்படுத்த எம்மை ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். எமக்குள் ஏற்படும் அன்பு, ஆசை, கோபம், வெறுப்பு என்பவற்றை உணர்வுபூர்வமாக அனுபவித்து நெறிப்படுத்துவதுடன் தீய பழக்கங்கள், எண்ணங்களையும் எம்மிடமிருந்து களைய முயற்சிக்க வேண்டும்.

மனிதனுள் அடங்கியிருக்கும் மிருக உணர்வுகளுக்கு நாம் மதிப்புக் கொடுக்காமல் எம்மை தூய்மையாக்கி தீய ஆசைகளை நிராகரிக்கவும் பழகிக்கொள்ள வேண்டும். எமது சுய கட்டுப்பாட்டிற்கு பாதகம் விளைவிக்கும் கோபத்தை தவிர்த்து அன்பை நெஞ்சில் வளர்க்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் செய்யும் வேலைகள், கால நிர்ணயம் வேலைத் திட்டங்களை செயற்படுத்தல் என்பவை சுயகட்டுப்பாடு உள்ளவர்களாக வாழ வழிகாட்டும். சுயகட்டுப்பாட்டுடன் எந்த செயற்பாட்டையும் செய்யும் போது வெற்றியும், சிறந்த பயனும், சமூகத்தில் நற்பிரஜையாக திகழும் வாய்ப்பும் எமக்கு கிடைக்கின்றது. எமக்குள் ஏற்படும் பயம், கோபம், சந்தோசம், தற்பெருமை என்பன சுயகட்டுப்பாட்டின் மூலம் சரியான வழியில் ஒழுங்குபடுத்தப்படுகிறது. நம்மை நாமே ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் புறச்சூழ்நிலையையும் நாம் கட்டுப்படுத்திட முடியும்.

கட்டுப்பாடு, ஒழுங்கு, பொறுப்புணர்ச்சி என்னும் பண்புகள் எம்மைப் பதப்படுத்தி ஆளுமையுள்ளவர்களாகவும், கூர்மையான மனித உணர்வுகள் உடையவர்களாகவும் உருவாக்குகின்றது. எமது வாழ்வின் இலட்சியங்களை அடைய சுய கட்டுப்பாட்டுடன் சிந்தித்து செயற்பட்டு அதனை அடைகின்றோம். சுய கட்டுப்பாடு இல்லாதவர்கள் ஒரு இலட்சியத்திலிருந்து இன்னொன்றுக்கு தாவி எதையும் சாதிக்காதவர்களாகக் காணப்படுகின்றனர்.

நாம் எந்த செயற்பாட்டிலும் ஈடுபடும் போது அதில் மனத்துணிவுடனும் அர்ப்பணிப்புடனும், தொடர் முயற்சியுடனும் ஈடுபடவேண்டும். எந்த வேலையையும் நேரத்துடன் எழுந்து செயற்பட முயற்சிக்க வேண்டும். எமக்குத் தரப்படும் நேரத்தை சிறிதளவும் வீணாக்கக்கூடாது. நாணம், பணிவு, தன்னடக்கம் என்னும் பண்பு கள் எம்மில் வளர வேண்டும். நாம் எந்த வேலையைச் செய்வதற்கும், பொறுப்பெடுப்பதற்கும், சரிவரத் தீர்மானம் எடுப்பதற்கும் சுயகட்டுப்பாடு மிகவும் அவசியமாகும்.

நாம் எடுத்துக்கொண்ட முயற்சி கடினமானதாகவும், தோல்வி ஏற்படுத்துவதாக இருப்பினும் நாம் விடா முயற்சியுடனும், சுயகட்டுப்பாட்டுடனும் செயற்படுவோமாயின் வெற்றி பெறலாம்.எதற்கும் எம்மால் முடியும் என்னும் மன உறுதியும், இயலாமையில் இயலும் என்னும் எண்ணமும், கடின உழைப்பும் வெற்றிக்கு வழிகாட்டும்.

பென்சிலின் எனும் மருந்தைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் பிளமிங் இங்கிலாந்திலுள்ள ஸ்கொட்லாண்டில் பிறந்தவர். சிறு வயதிலேயே தன் தந்தையை இழந்து பொருளாதார சிக்கல்களை அவர் எதிர்கொண்டபோதும் தானே உழைத்து, படித்து மருத்துவப் பதவியைப் பெற்றார். வறுமை காரணமாக கப்பல் கம்பனியில் வேலை செய்த இவர் மருத்துவத்துறையில் பிரபல்யம் பெற்று மருத்துவர்களை உருவாக்கியும் பென்சிலின் (Penicilin), ஸ்ரெப்ரோமைசின் (Streptomycin), டெற்றாமைசின் (Terramycian) என்னும் மருந்துகளை உலகிற்குத் தந்தும் பல உயிர்களை காப்பாற்றச் செய்வதற்கும் இவரது சுய கட்டுப்பாடே காரணமாகும்.

தன்னையும் தமிழையும் வளர்த்த தனிநாயகம் அடிகளார் இலங்கையின் ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சுயகட்டுப்பாட்டுடன் வாழ்ந்து கல்வியில் சிறந்து விளங்கி துறவறத்தினை மேற்கொண்டதுடன் உலக நாடுகளில் தமிழின் தொன்மையையும் பெருமையையும் எடுத்தியம்பியவர். அவர் இன்று உயிருடன் இல்லாவிடினும் தமிழ் கூறும் நல்லுலகத்தில் அழியா இடமும், புகழும் பெறக் காரணம் அவரது சுயகட்டுப்பாடே ஆகும்.

இவ்வாறு சுயகட்டுப்பாட்டின் மூலம் வெற்றி பெற்றவர்கள் பலர். சுய கட்டுப்பாடு எம்மில் இருந்தாலும் அதனை செயற்படுத்துவதில் தான் எமது வெற்றியுண்டு. எம் எல்லோரிடமும் ஆற்றல் உண்டு. எனினும் எம்மை அறிந்து எம்மில் நம்பிக்கை வைத்து தளரா மனத்தோடும் துணிவுடனும் செயற்படும்போது உயர்வு நிச்சயமாக எமக்கு கிடைக்கிறது. இவ்வுயர்வுக்கு அச்சாணி சுயகட்டுப்பாடாகும்.

தோல்வி எம்மைத் தொடர்ந்து தாக்கும் போது சுயகட்டுப்பாட்டுடன் செயற்பட்டால் வெற்றியடையலாம். எதற்கும் அஞ்சாது செயலூக்கமும், நம்பிக்கையும் கொண்டு எமது இலக்கை நோக்கி பயணிக்க வேண்டும். பொறுமை நிதானம் என்பன சுயகட்டுப்பாட்டின் விளைவுகளாகும்.

நான் சுய கட்டுப்பாட்டுடையவன்/ வள் என நாமே நமக்குள் கூறிப் பெருமைப்பட வேண்டும். அதிகம் சிந்திப்பவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடுவது மன உறுதியை வளர்க்கும். சுயகட்டுப்பாடு எமது சிந்தனையின் ஆற்றலுடன் மட்டும் சம்பந்தப்பட்டது. எனவே எமது எண்ணம் தான் எமது செயலைத் தூண்டுகிறது. ஆகவே நமது கட்டுப்பாட்டை வளர்க்கும் எண்ணங்களை நாம் வரவேற்க வேண்டும்.

சுய கட்டுப்பாட்டின் மூலம் உடலும் உள்ளமும் சுதந்திரமாக இயங்க முடிகிறது. மனதைக் கட்டுப்பாட்டில் வைத்து விரும்பியதை அடைய முடியும். மனச்சாட்சியை ஒத்துழைக்க வைத்து வழிகாட்டச் செய்ய சுயகட்டுப்பாடு தேவையாகும். நம்மை நாமே கட்டுப்படுத்தி ஒழுங்காகச் செயற்பட்டால் வேறு யார் எமக்கு தடையாக இருக்கப் போகிறார்கள்?

எனவே மன உறுதி, உணர்ச்சி, மனச்சாட்சி, காரண காரியம் அறிதல் , நினைவாற்றல், கற்பனைவளம் என்னும் ஆறு விடயங்களிலும் சுயகட்டுப்பாட்டை ஏற்படுத்திச் செயற்படுவோமானால் பல வெற்றிகள் எம் வசமாகும். சுய கட்டுப்பாட்டை எமது வாழ்வின் சகல முயற்சிகளிலும் கடைப்பிடித்து வெற்றி காணுவோம். •

காவலன் கலசம்

திருமறைக் கலாமன்றத்தின்

பெருமைக்குரிய படைப்பு

வருடந்தோறும் திருப்பாடுகளின் ஆற்றுகையை மிகவும் சிரத்தை எடுத்து ஆற்றுகை செய்யும் திருமறைக் கலாமன்றம் இவ்வருடம் வெள்ளியில் ஞாயிறு என்னும் பெயரில் புதிய பாடுபொருளில் மேடையேற்றி பலரது பாராட்டுக்களையும் பெற்றது. அருட்திரு நீ.மரியசேவியர் அடிகளின் பாடுகளின் நாடக எழுத்துரு ஒன்றினை திரு.யோ.யோண்சன் ராஜ்குமார் மீளுருவாக்கம் செய்து புதிய பாடுபொருளில் எழுதி நெறிப்படுத்திய இந்த ஆற்றுகை தொடர்பான விமர்சனமொன்றினை இன்றைய கலைக்காவலன் பிரசுரித்து மகிழ்கின்றது.

வருடா வருடம் திருமறைக் கலாமன்றம் பெருமையுடன் தயாரித்து வழங்கும் கிறிஸ்துவின் பாடுகளின் பயணம் தொடர்பான தவக்கால ஆற்றுகை உண்மையிலேயே இந்த வருடம் பெருமையுடன் வழங்கியுள்ளது என்பது மிகப் பொருத்தமாகின்றது.

வருடா வருடம் தெரிந்த ஒரு விடயத்தை எப்படி புதிது புனைதல் அல்லது புத்தளிப்புடன் வழங்குதல் என்பதில் எவ்வளவு போராட வேண்டியுள்ளது என்பது அவர்களுக்கே மட்டும் உரிய போராட்டம் ஆகும். இதில் முழுமையாக வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதே உண்மை. எம்மாவுஸ் பயணத்தினை பிரதான கதை சொல்லும் ஊடகமாகக் கொண்டு முழு நாடகத்தையும் நகர்த்தியமை அற்புதமான உத்தியாகும்.

பாத்திரத் தெரிவு, ஒலி, ஒளி, ஒப்பனை, மேடை அலங்கரிப்பு, வேட உடை, காட்சியமைக்கப்பட்டுள்ள விதம் யாவும் மிகவும் ஆச்சரியப்படத்தக்க வகையில் கனகச்சிதமாக அமைக்கப்பட்டுள்ளது.

ஆகா! ஓகோ! எனப் பாராட்டத் தக்க விதமான பாடல் வரிகளும் பாடல்களும் அமைந்திருந்தன. பின்னணி இசையும் இதற்கு விலக்கல்ல. பெண்குரல் பிரமாதம். இவ்வாறான கலைஞர்களையும் இவர்களின் திறமைகளையும் சரியாகப் பயன்படுத்தியுள்ளது திருமறைக் கலாமன்றம்.

சிறிய வயது முதல் அறிந்து கொண்ட வாய்மொழிப் பாரம்பரியமான தகவல்கள் யாவும் இப் பாடுகளின் பயணத்திலே அப்படியே காட்சிப்படுத்தப்பட்டு எமது நினைவுகளை மீட்டியது. அதாவது யூதாஸ் எனும் ஒரு காட்டிக் கொடுப்பாளனின் மனநிலை, அவனைத் தூண்டியது எது? அவன் எதிர்பார்த்த உடனடித் தீர்வு என்பன எவ்வித நியாயப்படுத்தல்களும் இன்றி சரியாக வந்து போயின.

பிலாத்து, இயேசு கூட்டம் இவர்களுக்கு இடையேயான கட்டம் கிளைமாக்ஸ். உரையாடல் பண்பு கைதட்டலுக்கு உரியது. வசனநடை நாடகத்தை தூக்கி நிறுத்தியது. மேலும் இயேசுவாக பாத்திரமேற்று நடித்தவர் தனது அர்ப்பணிப்புடனான முழுத் திறமையையும் கசக்கிப் பிழிந்து சாறு தந்துள்ளார்.

இறுதியாக எம்மாவுஸ் செல்லும் வழியில் கண்ட இயேசு பாத்திரம் தனது ரசச் சொட்டான இடங்களில் வந்து போனாலும் களத்தை நகர்த்திய விதமும் கட்டங்களில் காண்பிக்கப்பட்ட புலக் காட்சியும் அழுத்தமான அதேவேளை, கண்டுணர முடியாத ஒரு உறுதியான புன்னகையுடன் கூடிய முகபாவமும் உண்மையிலேயே எம்மாவுஸ் பயணத்தில் பயணித்த இயேசு இவ்வாறுதான் இருந்திருப்பாரோ என எண்ணத் தோன்றியது.

இரண்டேகால் மணி நேரம் போவதே தெரியாத வகையில் நாடகத்தினை நகர்த்தி இருந்தார்கள். ஒவ்வொரு கதைச் சூழலையும் தர்க்க ரீதியாக பொருத்திய வகையிலும், நாடக ஓட்டத்தினை பொருத்தமான இரசனைக்குரிய முறையில் நகர்த்திய வகையிலும் நாடக நுட்பங்கள் மிகச் சிறப்பாக கையாளப்பட்டிருந்தன.

இப்பதிவு எவ்விதமான குறைகளையும் சுட்டவில்லை என உங்களில் சிலருக்குத் தோன்றினாலும் எனது "பார்த்ததில் ரசித்தது" என்பது அவ்வாறான எந்தவொரு குறைகளையும் சுட்டவில்லை.

வெள்ளியில் ஞாயிறுக்கு மூன்று விதமான விளக்கக்குறிகளுடன் காட்சிப் படுத்தப்பட்ட இந்த ஆற்றுகை சர்வதேச தரத்திற்கு உயர்ந்துவிட்ட திருமறைக்கலாமன்றத்தின் படைப்புக்களில் ஒன்று என்பதை ஐயத்திற்கு இடமின்றி எம்மை உணரச் செய்கின்றது.

பங்கெடுத்த கலைஞர்களுக்கும் தயாரித்து வழங்கியவர்களுக்கும் நெறியாள்கை செய்தவர்களுக்கும் இயக்குநர் அவர்கட்கும் வாழ்த்துக்களை பணிவுடன் தெரிவிரத்துக் கொள்கிறேன்.

வெள்ளியில் ஞாயிறு

ஜென் சொபியா ஜெயராஜ்

மனிதமே விழித்தெழு

சிறுகதை

கன்னத்தில் வடியும் கண்ணீரைத்
துடைக்க எண்ணமின்றி கமலா
கலங்குகிறாள்.தான் கருவறையில் காத்த
குழந்தை காய்ச்சலால் காய்வது கண்டு
கலங்குகிறாள். துயில்கொள்ள கட்டில்
கூட இல்லாத ஓட்டைக்கொட்டிலில் ஒட்டி
உலர்ந்த வயிறுடன் புரண்டுபடுக்கும்
குழந்தையை வாரி அணைத்து
கொள்கிறாள் வன்னிப் போரில்
குங்குமத்தை இழந்து நிற்கும் அந்த
இளம் விதவைக்கு விடிவேது?

துப்பாக்கி ரவைகள் தைத்த கணவனின்
உடலைப் பார்ப்பதா அல்லது பிறந்து ஆறு
மாதங்களேயான தன் பிஞ்சு பாலகனைப்
பார்ப்பதா தன் மனதைக் கல்லாக்கிக்
கொண்டும்,கிடைத்த பொருட்களை
எடுத்துக்கொண்டும் புனர்வாழ்வு முக-
ாமை நோக்கி நடந்தவள் விடுதலையாகி
2 நாட்களாகி விட்டது.

அநாதரவற்ற காணியில்,அயலோரின்
உதவி கொண்டு சிறு கொட்டில்
ஒன்றைப் போட்டு உறைந்து
கொள்கிறாள்.திருமணமாகி இரு
வருடங்களேயான நிலையில்
கணவனே கதி என்று கிடந்தவள்
கதி கலங்கி நிற்கிறாள்.உண்ண
உணவில்லை உடுத்த உடையில்லை.
குழந்தைக்கு காய்ச்சல்
அனலாய் காய்கிறது என்ன செய்வாள்?
யாரிடமாவது கடன்கேட்போம் என்றால்
அறியாத ஊர்,தெரியாத மனிதர்கள்.
யாரிடம் செல்வாள் கடவுளே கதி
என்று கிடந்தவளை குழந்தையின்
காய்ச்சல் பயமுறுத்தியது.குழந்தைக்காக
மடிப்பிச்சை கேட்க துணிகிறாள்.
காய்ச்சலில் வேகும் குழந்தையை சுமந்த
வண்ணம் அயலில் உயிர்ப்பிச்சை

கேட்கிறாள்.அவர்கள் பணம்
தர மறுக்கிறார்கள், கண்களில் பொங்கி
வழியும் கண்ணீரை துடைக்கிறாள்
அவள் மீது இரக்கப்பட்ட வயதான
பாட்டி இவள் அருகில் வந்து 'உன்னைப்
பார்க்கப் பாவமாகத்தான் உள்ளது.
எங்கள் அடுப்பங்கரைகளிலும் பூனை
தான் தூங்குகிறது. ஆனால் எனக்குத்
தெரிந்த உறவுக்காரி சிறு தொலைவில்
தான் இருக்கிறாள். அவளிடம் ஏதும்
உதவி கேட்கலாம் என்ற கூற அவள் தன்
கண்ணீர் மூலம் நன்றி சொல்கிறாள்.
குறித்த பாட்டி, வீட்டின் அமைவிடத்தைக்
கூறினாள். அதற்கு சற்றுத் தூரம் நடக்க
வேண்டும். ஆகவே வெய்யிலின்
உக்கிரத்தில்
குழந்தையைக்
கொண்டு
செல்வதற்கு அவள்
மனம் இடம்
கொடுக்கவில்லை.
தன் மீது இரக்கப்
பட்ட பாட்டியிடம்
குழந்தையைக்
கொடுத்து விட்டு
ஓட்டமும் நடை
யுமாக குறித்த வீடு
நோக்கி நகர்கிறாள். பெரிய வீடு. வாசலில்
பெரிய நாய் அதற்கு 2 தட்டில் உணவு.
ஆனால் தன் பிஞ்சுப்பாலகனுக்கு
வைத்தியம் செய்ய பணம் இல்லை.
அவள் வயிறு பற்றி எரிகிறது. நாயின்
குரைப்புச் சத்தம் கேட்டு வெளியில்
வந்தவள் முகத்தை சுழிக்கிறாள்.
அவள் சுழிப்பைக் கண்ட கமலாவின்
மனம் கண்ணீர் வடிக்கிறது.
பின்பு தன் நிலையைக் கூறி
கண்ணீர் வடிக்கிறாள். அந்தப்
பெண்ணும் குழந்தைக்கு
வைத்தியம் செய்வதற்கு பணம்
தருவதாக ஒப்புக் கொள்கிறாள்.
ஆயினும் அதற்கு வேதனமாக
அவள் வியர்வையைக் கேட்கிறாள்.
வீட்டைப் பெருக்கி, கழுவி ஆடைகளை
தோய்த்து உலத்தி தன் குழந்தைகளுக்கு
மதிய உணவும் சமைக்கும்படி கட்டளை
இடுகிறாள்.

வேரின்றிப் போன ஆலமரம்
போல சாய்கிறாள். வேலையை
முடித்து விட்டு பணத்தைப்
பெற்றுக்கொள்ளும்படி கூறிவிட்டு

உ. டிலக்ஷிகா

வீட்டுக்காரி காரில் பறக்கிறாள்.

குழந்தையை எண்ணவே
அவளுக்கு தலை சுற்றியது. வேக
மாக தன் வேலையை முடித்தாள்
கட்டளைகள் அதிகமாக இருப்பினும்
அதை நிறைவேற்ற சில மணித்துளிகள்
அவளுக்குப் போதுமாக இருந்தது.
பெற்ற மனமல்லவோ! பணத்தை
பெறுவதற்குள் 4 மணியாகி விட்டது.
ஓட்டமும்நடையுமாக வீடு வந்து
சேர்ந்தாள். ஆனால் அவள் சுமந்து
பெற்ற குழந்தையின் ஆன்மா எப்போதோ
பிரிந்து விட்டது.

நிலைமாறும் நீதிப் பொறிமுறை (Transitional Justice)

முகவுரை

காலத்தின் நீரோட்டத்தில் மிகவும் அருகிச் செல்லும் விடயங்களில் ஒன்று நீதி. நீதி என்பது உரிமைகளுடன் தொடர்புபட்ட பேசுபொருள். கவிப் பேரரசு வைரமுத்து "முரண்பாடுகள்" என்னும் தனது கவிதையிலே குறிப்பிடும் கருத்து எம்மண்ணில் நிதர்சனம்; "நீதி மன்றம் சுத்தம் செய், நீதிக்குப் குப்பைக்கூடை". மேலும் அவர் தனது "இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல" என்னும் கவிதை நூலில் குறிப்பிடுகிறார் : "கூட்டு வாழ்க்கை கலையாமல் இருப்பது காட்டுக்குள்தான்". விலங்குகளும், பறவைகளும் அதன தன் உரிமைகளை மதித்து வாழ்வதனால், சிறு சிறு சண்டைகளுடன் அவை தமக்குள் சமரசம் செய்து கொண்டு இயல்பு நிலைக்கு மீண்டும் திரும்பி விடுகின்றன. எனவே அங்கே யுத்தம் என்பதற்கு சாத்தியங்கள் ஏதுமில்லை. மனிதன் மட்டும்தான் போர் தொடுக்கின்றான், ஆக்கிரமிக்கின்றான், அநீதி இழைக்கின்றான், அழிந்து போகின்றான்.

யுத்தத்தினால் சாம்பல் மேடுகளான வாழ்விடப் பகுதிகள் இன்னமும் சுடுகாடுகளாகவே இருக்கின்றன. ஜனநாயகம் என்றபோர்வையில் உரிமைகள் நாளுக்கு நாள் பறிக்கப்பட்டு, ஒடுக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. ஜனநாயகத்தைக் காப்பாற்ற மக்களைக் கொன்றுவிடு என்பதே எம் நாட்டின் வேதமாகவுள்ளது. இந்நிலையில் ஒடுக்கு முறைக் கூண்டினுள் அடைக்கப்பட்டுள்ள நிலையில், சாம்பல் மேட்டின்மேல் ஏறி நின்று கொண்டு நிலைமாறுகால நீதி பற்றி சுருக்கமாக விளக்க முனைகிறேன்.

1. நீதி என்றால் என்ன?

பொதுவாக நீதி என்பது உரியவனுக்கு உரியதைக் கொடுப்பதே நீதியாகும். நீதி பலவகைப்படும். அதிலே பிரதான இரு பிரிவுகள் உண்டு: அவையாவன, பண்பு நிலை நீதி (Attributive Justice) விகித சமநீதி (Proportional Justice) என்பவையாகும். விகித சம நீதியானது பரிமாற்று நீதி (Commutative Justice), பங்கீட்டு நீதி (Distributi Justice), பங்களிப்பு நீதி (Contributive Justice), சமூக நீதி (Social Justice) என நான்கு பிரிவுகளாகப் மேலும் வகைப்படுத்தப்படும். இவற்றைவிட மேலும் இருவகை நீதியுண்டு. அவையாவன மீள்நிலை பெறல் நீதி (Restorative Justice), தண்டனை வழங்கும் நீதி (Retributive Justice).

1.1 பண்புநிலை நீதி (Attributive Justice)

ஒருவன் தனது உரிமையின் பொருட்டு தனக்குரியவற்றைப் பெற்றுக் கொள்ளும் நிலையும் அதனால் அவன் எந்நிலையில் இருக்கின்றான் என்பதை உணர்த்தும் தன்மையும் கொண்டதே பண்பு நிலை நீதியாகும். இந்நீதியானது ஒரு மனிதன் மனிதனாக இருக்கும் உரிமையையும், அவன் உடைமைகள் சொத்துக்கள் வைத்திருக்கும் உரிமையையும், சுய மரியாதை மற்றும் நற்பெயர் கொண்டு வாழும் உரிமையையும், தகைமைகள் கொண்டு வாழும் உரிமையையும் அவனுக்கு வழங்குகிறது.

1.2 விகித சமநீதி (Proportional Justice)

இந்நீதியானது உடைமைகளும் சுமைகளும் சரியான அளவு வீதம் கொண்டு பகிரப்படவேண்டும் என்று கூறி நிற்கிறது. அதாவது ஆதாயம், இழப்பீடு, ஊதியம் இவற்றோடு சுமைகளும் நேர்த்தியாகப் பகிரப்படவேண்டும் என்பதே இதன் நியதி.

1.3. பரிமாற்று நீதி
(Commutative Justice)

பண்டமாற்றம் செய்யும்போது பரிமாறப்படும் பொருட்கள் சமமான மதிப்பீடு உள்ளவையாக இருக்க வேண்டும் என்பதே இதன் நியதி.

1.4. பங்கீட்டு நீதி (Contributive Justice)

ஒரு குழுமத்தில் அல்லது சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் அக்குழுமத்தின் அல்லது சமூகத்தின் பொதுநலனைக் கருத்திற்கொண்டு அப்பொது நலனுக்கான தமது பங்களிப்பினை வழங்க வேண்டும் என்பதே பங்களிப்பு நீதியின் படிப்பினை.

1.6. சமூக நீதி (Social Justice)

ஒரு சமூகத்தின் இயல்பிற்கேற்ப அவ்வியல்பிலிருந்து உருவாகும் கடமையையும், உரிமையையும் குறிப்பிடுகிறது.

1.7. மீள் நிலையளிக்கும் நீதி / மீள்நிலை பெறல் நீதி
(Restorative Justice)

சில அழிவுகளின் பின்னால் மீண்டும் ஒரு சமூகத்தை அதன் முன்னைய நிலைக்கு மீட்டெடுக்கும் கடமையும் உரிமையும் பற்றிப் பேசுவதே மீள் நிலை பெறல்நிதியாகும்.

1.8. தண்டனை வழங்கும் நீதி
(Retributive Justice)

அதனதன் கனாகனத்திற்கேற்ப நியமங்களின் அடிப்படையில் ஒவ்வொரு குற்றச் செயல்களுக்கும் வழங்கப்படும் தண்டனை பற்றியே இந்நீதி பேசுகிறது.

மேற்குறிப்பிட்ட நீதிகளிலிருந்து நாம் நிலைமாறுகால நீதியென்றால் என்ன என்பதை ஆராய்வோம். மேற் குறிப்பிட்ட நீதி வகைகள் போன்று நிலை மாறு கால நீதியும் ஒரு தனிவகை நீதியல்ல. மாறாக இது ஓர் அணுகுமுறையே

அருட்பணி T.ரவிராஜ்

நிலைமாறு கால நீதிப் பொறிமுறை எனப்படும். இவ்வணுகுமுறை எவ்வாறு மேற்கொள்ளப்படவேண்டும்? அது இலங்கை நாட்டில் சாத்தியமானதா? எனச் சிந்திப் போம்.

2. நிலைமாறுகால நீதி என்றால் என்ன?

நிலைமாறுகால நீதியானது மேலே குறிப்பிடப்பட்டுள்ள நீதி வகைகளில் மீள்நிலைபெறல் நீதி, தண்டனை வழங்கும் நீதி மற்றும் சமூக நீதி ஆகிய இம்மூன்று வகை நீதிகளையும் இணைத்து ஏற்படுத்தப்படும் ஓர் பொறிமுறை. இதனை நாம் ஓர் அணுகுமுறை என்றும் கூறலாம். இங்கே தண்டனை வழங்கும் நீதி இழைக்கப்பட்ட குற்றங்களுக்கான தண்டனை வழங்கல் செயற்பாட்டுடன் தொடர்பு கொண்டுள்ளது. இது இக்காலகட்டத்தில் மேலும் குற்றங்கள் இடம்பெறாது தடுக்கும் ஓர் பொறிமுறையாகக் காணப்படும். இங்கே முறையாகச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு, நீதிமன்ற முறைமைகள் உரியமுறையில் அமைக்கப்பட்டு, இழைக்கப்பட்ட தவறுகள் சீரானமுறையில் திருத்தியமைக்கும் ஓர் பொறிமுறை கையாளப்படும்.

பொதுவாக நிலைமாறுகால நீதி என்பது பொறுப்புக் கூறுதல் (Accountability), பாதிக்கப்பட்டவர்களுக்கு மீள் உருக்கொடுத்தல் (Redress for victims) ஆகிய இவ்விரு செயற்பாடுகளிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். மேலும் நிலைமாறுகால நீதி அணுகுமுறையானது அதன் பிரதான அம்சங்கள் மாறாதபோதும் இவ்வணுகுமுறையை செயற்படுத்தும் பிரதேசத்தின் பிரச்சினைகளின் தன்மைகளுக்கும், சூழலுக்கு மேற்ற அதன் அணுகுமுறையில் சிறிய சிறிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வாய்ப்புக்களுண்டு.

2.1. பிரதான அம்சங்கள்

1. தனிமனித மாண்பினை அடையாளம் கண்டு அங்கீகாரம் வழங்குதல்.
2. பாதிக்கப்பட்டவர்களுக்கு மீள் உருக் கொடுப்பதோடு, பாதிப்பை ஏற்படுத்தியவர்களை அவற்றை ஏற்றுக்கொள்ளச் செய்தல் அல்ல பொறுப்புக் கூறச் செய்தல்.
3. முன்னர் இழைக்கப்பட்ட அழிவுகளும், பாதிப்புக்களும் ஒட்டுமொத்த குற்றச் செயல்களும் மீண்டும் நடைபெறாது தடுத்தல்.

> "எங்கோ ஒரு மூலையில் நடக்கும் அநீதி ஏனைய இடங்களில் இருக்கும் நீதிக்கு எப்போதும் ஆபத்தை ஏற்படுத்தும்"
> – மாட்டீன் லூதர் கிங்

இவையே நிலைமாறுகால நீதிப் பொறிமுறையின் பிரதான அம்சங்களாகும்.

2. அணுகுமுறை வகைகள்

நிலைமாறுகால நீதிப்பொறிமுறையானது தன்னகத்தே ஐந்து வகையான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளது.

1. இழைக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கெதிரானவழக்குவிசாரணையைத்தொடருதல் (Criminal Prosecution)
2. உண்மையைக் கண்டறிதல் (Truth Seeking)
3. ஏற்படுத்தப்பட்ட அழிவுகளுக்கான நட்டஈடு வழங்குதல் (Reparations)
4. சட்டங்களையும், அமைப்புக்களையும் சீர்படுத்துதல் (Reformation of laws and institutions)
5. பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கான நினைவுச் சின்னங்களை ஏற்படுத்த ஆவன செய்தல் (Memorialization of the Victims)

அரசியல், சமூக மற்றும் சட்டரீதியான நிலைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு எப்போது எவ்வகையான பொறிமுறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தீர்மானிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே இப்பொறிமுறையை நடை முறைப்படுத்துவதற்கு முன்னர் நடை முறைப்படுத்தப்படவிருக்கும் பிரதேசத்தின் சூழமைவு நன்கு ஆய்வு செய்யப்படவேண்டும். கொலம்பியா, குவாடமாலா, எல்சல்வடோர், கொங்கே ஜனநாயகக் குடியரசு, லிபேரியா, தென்சூடான், பிலிப்பைன்ஸ், நேபால் போன்ற நாடுகளில் நிலைமாறு கால நீதிப் பொறிமுறை வெற்றியளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் வெற்றிக்கு அதிகாரப் பகிர்வு என்பது முக்கிய இடம் வகிக்கிறது. அதிகாரப் பகிர்வே எவ்வளவு நல்ல விடயங்களை நடைமுறைப்படுத்த முடியும் எவ்வளவு நல்ல விடயங்களை மேலும் உள்வாங்க முடியும் என்பதனைத் தீர்மானிக்கும் பிரதான காரணியாகும்.

3. இலங்கை நாட்டில் நிலைமாறுகால நீதி

நிலைமாறுகாலப் பொறிமுறையில் இழைக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கான பொறுப்புக்கூறுதலும், பாதிக்கப்பட்ட பகுதியினை மீண்டும் கட்டியெழுப்பி அவர்களை இயல்பு நிலைக்குக் கொண்டு வருதலும் மிகவும் பிரதான விடயங்களாகும். மேற்குறிப்பிட்ட இரு செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை வழங்கி அங்கீகரிப்பதோடு, நம்பகத்தன்மையை ஏற்படுத்தி ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவழியமைத்துக்கொடுக்கும்.

இவ்வணுகுமுறையில் காணப்படும் அடிப்படை நியமங்களான இழைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கு எதிராக வழக்குத் தொடரும் உரிமை, மீள்கட்டுமானம், சட்டம் மேலும் நிறுவனங்கள் அமைப்புக்கள் சீர்படுத்தல், உண்மையைக் கண்டறிதல், பாதிக்கப்பட்டவர்களுக்கான நினைவுச் சின்னங்களை அமைத்தல் என்பன இலங்கை நாட்டில் சாத்தியமாகுமா என்பதே இங்கே எழும் மிகப்பெரும் கேள்வி.

சட்டம்குற்றவாளிகளைப் பாதுகாப்பதோடு, அரசு அவர்களை கௌரவிக்கவும் தவறவில்லை. நந்திக்கடலுக்கான வீதியில் உண்மை எரிக்கப்பட்டும், புதைக்கப்பட்டும் விட்டது. மீண்டும் மீண்டுமாக எங்கள் வர்ணம் தீட்டப்பட்ட நீதிமன்றங்களில் உண்மை நிலையில் சூனியத்தன்மைக்குள்ளே "விசாரணை" நடக்கின்றது. ஞாபகச் சின்னாங்கள் அழிக்கப்பட்டு, கடந்தகால ஞாபகங்களே இல்லாமல் வாழவேண்டும் என்று நிர்ப்பந்திக்கும் நிலைப்பாடு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பாதிக்கப்பட்ட இனத்தின் அடையாளங்கள் மெல்ல மெல்ல சிதைக்கப்பட்டு அதன் வரலாறே மாற்றியமைக்கப்படும் துர்ப்பாக்கிய நிலையில் நிலை மாறுகால நீதிப்பொறிமுறை எப்படி இங்கே சாத்தியமாகும்.

முடிவுரை

"எங்கோ ஒரு மூலையில் நடக்கும் அநீதி ஏனைய இடங்களில் இருக்கும் நீதிக்கு எப்போதும் ஆபத்தை ஏற்படுத்தும்" என்று புரட்சியாளன் மாட்டீன்லூதர் கிங் அவர்களின் கூற்றை கூறி நீதியே அமைதிக்கான ஒரே வழி என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மதங்களும், அமைப்புக்களும் நீதியைப் போதிக்கட்டும். நீதியுள்ள இடத்தில் உரிமைகள் உயிரோடு வாழும். உரிமைகள் உயிரோட்டம் பெற்றால் சுதந்திரம் அர்த்தம் பெறும். அங்கே சமத்துவமும், சகோதரத்துவமும் இயல்பாகவே உருவாகும். இயல்பு நிலை வாழ்வு என்பது நீதியுள்ள குழுமத்திற்கே சொந்தமானது.

"கூட்டு வாழ்க்கை என்பது கலையாமல் இருப்பது காட்டுக்குள்தான்"

காவலன் கலசம்

காவலன் கண்மணிகள்



இடமிருந்து வலம்

1. ஜனவரி முதலாம் திகதி மரியன்னைக்கு கொடுக்கப்பட்ட சிறப்பு
2. குழந்தை இயேசுவை ஏரோது கொல்லத் தேடியதால் யேசேப்பு குழந்தையையும் தாயையும் கூட்டிக்கொண்டு இங்கே சென்றார்.
3. இறைவனுக்கும் எமக்குமான உரையாடல்
4. சிலுவை அடியில் அன்னை மரியாவுக்கு மகனாக கிடைத்தார்.
5. திருச்செபமாலை ஓதுவது இந்த முயற்சிகளில் ஒன்று.
6. மே மாதம் இவ்வாறு அழைக்கப்படும்.
7. பதினெட்டு தடவைகள் மரியன்னையின் காட்சியைப் பெற்ற பெண்
9. கி.பி.1858 ஆம் ஆண்டு மாசி 11 இல் மரியன்னை காட்சி கொடுத்த இடம்
10. காணிக்கை அன்னை திருநாள் இடம்பெறும் மாதம்
11. இந்தியாவில் மரியன்னை காட்சி கொடுத்த இடம்.
12. றோசாப் பூமாலை என்பதைக் குறிக்கும் சொல்

மேலிருந்து கீழ்

2. மரியன்னையின் உறவினள்
3. மரியன்னையின் விருப்பத்திற்குரிய மாலை
8. பாத்திமா நகரில் அன்னை மரியாவின் காட்சி பெற்ற சிறுமி

காட்டில் இருட்டில் பாதையைத் தவறவிட்ட அறிவாளி மின்னல் அடிக்கும் போது பாதையைப் பிடித்துக் கொள்கிறான். முட்டாள் தன் பாதையைத் தவறவிட்டு விட்டு மின்னலைப் பார்த்துக் கண்களைப் பறிகொடுக்கிறான்.

மின்னலைப் பிடித்து ... மின்னலைப் பிடித்து...

வாழ்க்கையில் நாம் தவறவிட்ட பாதையை வழிகாட்டத்தான் ஞானிகளும், மகான்களும் வருகிறார்கள். அப்படி ஒவ்வொருவரும் போட்ட பாதையில் நாம் அனைவரும் வசதியாகப் பயணிக்க விரும்புகிறோம். மின்னல்கள் வரும்போது நம் பாதையை பிடித்துக் கொள்ளவேண்டும். கண்களை குருடாக்கி விடக்கூடாது.

உள்ளத்தில் உயர்ந்த உள்ளம்

மண் நிமிர்ந்தால் மலை உயரும்
மனம் நிமிர்ந்தால் வாழ்வு உயரும்

நம் திறமைகளை உயர்த்தி சக்தியின் எல்லைகளை நீட்டி, எந்தச் சூழலிலும் தன்னைக் குறைத்து மதிப்பிட தாழ்வு மனமின்றி நிமிர்ந்து நிற்கும் உள்ளமே உயர்ந்த உள்ளம். உடற்குறையோ, உளக் குறையோ அதனை ஒரு குறைபாடாகப் பார்க்காமல் மாறுபாடாகப் பாவித்து உழைத்தவர்கள் தான் வரலாற்றில் இமயமாய் உயர்ந்துள்ளனர்.

இளையோர் காவியம் 06

இந்த
நவீன உலகம்
உனக்கு அறிமுகம் செய்வது
எல்லாம்
உன்னை
பலப்படுத்த மட்டுமல்ல
பலவீனப்படுத்தவும் தான்

உன் அலங்கோலமான முடிவெட்டு
வாழ்க்கையிலும் விழுந்த வெட்டு

பணம் வருகிற வழி மட்டுமல்ல
நேர்வழியில் இருக்கட்டும்
போகிற வழியும்

பிக்காசோ
கிறுக்கிய கோடுகளுக்குள்
செதுக்கி வைக்கப்பட்டது
ஓவியங்கள்

நீ தலையில் போட்ட கோடுகளுக்குள்
நொருக்கி வைக்கப்பட்டது நாகரிகம்

உன் வாழ்க்கையில்
முதல் முதலாய் குடித்தநாள்
சீரழிவின் பாதை திறக்கப்பட்ட நாள்

நீ மதுவை அருந்துகிறபோது
வெறுமையாகும் போத்தலில்
நிரப்பப்படுகின்றது இளமை

அப்போது குடிகாரன் பேச்சு எல்லாம்
விடிந்து விட்டால் போச்சு
இப்போது குடிகாரன் பேச்சால்
வாழ்க்கையே இருண்டு போச்சு

நீ கால் அரை முக்காலாய் குடித்து
வாய்க்காலாய் போன வாழ்க்கையில்
அடித்து செல்லப்படுகிறது
உன் வருங்கால குழந்தை

நீ குடியில் தள்ளாடும் போது
கெட்டுப்போனதாய் சிரிக்கிற ஊரில்
உனக்காக அழுகிற மனிதர்களுக்காக
குடிப்பழக்க சுவரை இடி

உன் தெளிவான முடிவுகளை
உறுதியான இடத்தில் வை

அது மட்டும் தான்
நீ குடியை விடுவதற்கான மருந்து

– உபிரோவியன்

ஒவ்வொன்றுக்கும் ஒரு காலமுண்டு

ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு
உலகில் நடக்கும் ஒவ்வொரு
நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு

பிறப்புக்கு ஒரு காலம்
இறப்புக்கு ஒரு காலம்
நடுகைக்கு ஒரு காலம்
அறுவடைக்கு ஒரு காலம்
சொல்வதற்கு ஒரு காலம்
செய்வதற்கு ஒரு காலம்
குணப்படுத்தலுக்கு ஒரு காலம்
உடைத்தலுக்கு ஒரு காலம்
கட்டுதலுக்கு ஒரு காலம்
அழுகைக்கு ஒரு காலம்
சிரிப்புக்கு ஒரு காலம்
துயரப்படுவதற்கு ஒரு காலம்
துள்ளி மகிழ்வதற்கு ஒரு காலம்
அரவணைக்க ஒரு காலம்
தேடிச் சேர்ப்பதற்கு ஒரு காலம்
இழப்பதற்கு ஒரு காலம்
காக்க ஒரு காலம்
எறிய ஒரு காலம்
அன்புக்கு ஒரு காலம்
வெறுப்புக்கு ஒரு காலம்
இது அனைத்தும்
நடைபெறும் காலம் தான்
மனிதா உன் வாழ்க்கை காலம்
மாணவர்களாகிய
எமக்கு இது அறிவிலும் ஞானத்திலும் எம்மை வளர்த்துக் கொள்ள கிடைத்த காலம் என்பதை உணர்ந்து செயற்படுவோம்.

ம. அனுசியா
தரம் 12
யா/ சென் சாள்ஸ் ம.வி.

மக்கள் நரகத்தில் விழாமல் இருக்க, "ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நரக நெருப்பிலிருந்து எங்களை மீட்டருளும். எல்லாரையும் விண்ணகப் பாதையில் நடத்தியருளும். உமது இரக்கம் யாருக்கு அதிகம் தேவையோ, அவர்களுக்கு சிறப்பாக உதவி புரியும்" என்ற செபத்தை செபிக்குமாறு பாத்திமா பதியில் காட்சி கொடுத்த மரியா சிறுவர்களுக்கு கற்றுக் கொடுத்தார்.

நவநாகரிகம்

மரணத்தின் அச்சமூட்டலில் இருந்து
தப்பமுடியாத தெருவில்
தினமும் நடக்க வேண்டியிருக்கிறது
தாகங்கள் வற்றிய மனத்தினுள்
சோகங்களாய் கனக்கும் நினைவுகள்
பந்தங்களால் எரிகிறது
பாடையில் போகும் வாழ்விற்காக

பேரம் பேசப்படும் வாழ்க்கைச் சந்தையில்
மலிவாய் கிடைக்கிறது உயிர்
வீரம்பேசி வாழ்ந்த காலம் போய்
இன்று ஈரம் இன்றிக் கிடக்கிறது நிலம்

தூரம் போகும் கனவுகள் போய் இன்று
துவண்டு கிடக்கிறது மனம்
வாரம் ஒரு முறை வரும் நாட்களாய்
வந்து கழிகிறது வாழ்வு

கருவறை தொடங்கி கல்லறை நோக்கிய
வாழ்க்கைப் பயணத்தில்
பொம்மலாட்ட பொம்மைகளாய்
மாறிவிட்டது மனிதம்

அவன் இன்றி அணுவும் அசையாது போய்
இன்று மது இன்றி மனிதம் அசையாது
நீதியை மறைத்து அநீதியை கையிலேந்தி
புதிய கலாசாரத்தை மனிதன் படைக்கின்றான்
நவநாகரிகம் என்ற போர்வையில்...

அல்போன்சா மொக்கர்
யா / புனித பத்திநாதர் கல்லூரி

சிந்திக்க ஓர் சித்திரம்

நீதிமொழிகள்

1. கனிவான மறுமொழி கடுஞ்சினத்தையும் ஆற்றிவிடும். கடுஞ் சொல்லோ சினத்தை எழுப்பும்.
2. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்.
3. அறிவை விரும்புவோர் கண்டித்துத் திருத்தப்படுவதை விரும்புவர்.
4. கடும் உழைப்பு எப்போதும் பயன் தரும். வெறும் பேச்சினால் வருவது வறுமையே.
5. விவேகமுள்ளவர்களுக்கு அவர்களது விவேகமே வாழ்வளிக்கும் ஊற்றாகும். மூடருக்கு அவரது மடமையே போதிய தண்டனையாகும்.
6. சண்டை நடக்கும் வீட்டில் விருந்துண்பதைவிட மன அமைதியோடு பழஞ்சோறு சாப்பிடுவதே மேல்
7. சொரணை கெட்டவனுக்கு நூறு அடி கொடுப்பதைவிட உணர்வுள்ளவனுக்கு ஒரு சொல் சொல்வது மிகுந்த பயனைத்தரும்
8. தேனை மிகுதியாக சாப்பிடுவது நன்றன்று. புகழ்ச்சியை மிகுதியாக விரும்புவது நன்றன்று.
9. நல்லாரின் சொற்கள் வாழ்வளிக்கும் ஊற்றாகும். பொல்லாரின் பேச்சிலோ கொடுமை மறைந்திருக்கும்.
10. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம். ஞானத்தையும் நற்பயிற்சியையும் மூடரே அவமதிப்பர்.

சி.கியூஸி (தரம் 12)யா/ புனித சாள்ஸ் ம.வி.

அருள் வளங்களைப் பெற்றுத்தரும் திருச்செபமாலை பக்தி

இ.அ.அமலரட்ணம்

முகவுரை

ஒரு மனிதன் எந்த மதத்தைச் சார்ந்தவன் என்றாலும் இறைவனோடு உறவு கொள்ளவும், அந்த உறவை முறிவடையாமல் பேணவும் அதேநேரம் ஆழப்படுத்தவும் செபத்தை ஒரு ஊடகமாகப் பயன்படுத்துகின்றான். திருமுழுக்குப்பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் செபத்தோடு இணைந்து வாழ்வது அவனது அன்றாட செயற்பாடுகளில் ஒன்றாக இருப்பதோடு நாளாந்த வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுகின்றது. தனியாக செபித்தல், குடும்பமாகச் செபித்தல், குழுமமாகச் செபித்தல் போன்ற செயற்பாடுகள் வழியாக இந்த செபவாழ்வு முன்னெடுக்கப்படுகின்றது. செபத்தின் வழியாக அல்லது பக்தி முயற்சிகள் வழியாக இறைவனுக்கும் எமக்கும் இடையே இருக்கும் உறவை ஆழப்படுத்தவும், புதுப்பிக்கவும் இறை வனின் அருளை அபரிமிதமாகப் பெறவும் கூடியதாக உள்ளது.

வைகாசி மாதமும் திருச்செபமாலைப் பக்தியும்

வைகாசி மாதத்தை அன்னை மரியாவின் வணக்க மாதமாகக் கொண்டாடும் வழக்கம் கத்தோலிக்க திருச்சபையில் 19 ஆம் நூற்றாண்டில் தான் தொடக்கப்பட்டது என்றாலும், மரியா பக்தி திருச்சபையுடன் தோன்றியதொன்றாகும். ஒரு வருடத்தில் புனித கன்னிமரியாளுக்கு எடுக்கப்படுகின்ற எண்ணில்லா பெரு விழாக்களைக் கொண்டே மரியாளுக்கு உள்ளமதிப்பையும் வணக்கத்தையும் நாம் உணர்ந்து கொள்ள முடியும். அதனால் தான் இரண்டாம் வத்திக்கான் சங்கம் **"அன்னை மரியா திருச்சபையின் தாயும் மாதிரியும்"** என்கிறது. வைகாசி மாதத்தில் ஆலயத்தில் மக்கள் ஒன்றுகூடி திருச்செபமாலை சொல்வதன் மூலம் அன்னைக்குப் புகழ் பாடுவதோடு அவளுடைய பரிந்துரை வழியாக இறைவனி டம் இருந்து நன்மைத் தனங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். அத்துடன் தேவதாயின் புதுமைகள் நிறைந்த சரித்திரங்களை வாசிப்பதன் ஊடாக அன்னையின் பரிந்துரையை உணர்ந்து துன்ப வேளைகளில் அவளை நாடிச் செல்வற்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்கின்றனர் இன்று இவ்வணக்கமாதப் பக்தி முயற்சி பல இடங்களில் நடைமுறையில் இல்லாது இருப்பதும் அப்படிச் சில இடங்களில் இப்பக்தி முயற்சி முன்னெடுக்கப்பட்டாலும் பங்குபற்றும் விசுவாசிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதையும் காணக் கூடியதாக உள்ளது. இந்நிலை மாறவும், இப்பக்தி முயற்சி சிறப்பாக முன்னெடுக்கப்படவும் இறைவனைப் பார்த்து மன்றாடுவோம்.

செபமாலையின் மகிமை

செபமாலை என்பது இறை வார்த்தைகளை உள்ளடக்கிய செபங்களாகும். நாம் எம்மை அறியாமலேயே இறைவார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லுகின்றோம். அத்துடன் இயேசுக் கிறிஸ்துவின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளையும் அன்னை மரியாவின் பெருமை கொள்ளத்தக்க நிகழ்வுகளையும் பற்றி சிந்திக்கின்ற ஒரு தியானமாக அமைகின்றது.

இந்த மறையுண்மைகளை ஒரே நேரத்தில் எமது உதடுகளால் சொல்லவும் மனதில் இருத்தித் தியானிக்கக்கூடிய செபங் களாகவும் அமைகின்றன. இவை இரண்டின் வழியாக இறைவனோடு முழுமையாக நம்மை இணைக்கவல்ல ஆற்றல்மிக்கது இச்செபமாலைப் பக்தி முயற்சியாகும் **"நான் உங்களுக்கு ஒரு இரகசியம் சொல்லட்டுமா இது எளிமையானது சொல்லப் போனால் ரகசியமே இல்லை. செபியுங்கள் தினமும் செபமாலை சொல்லுங்கள்"** என்றும் **"மாலை வேளைகளில் செபமாலை சொல்லும் குடும்பம் எவ்வளவு அழகானது"** என்றும் புனித இரண்டாம் ஜோன் போலும் **"செபமாலை சொல்லும் ஒரு படையை எனக்குக் கொடுங்கள்" நான் இவ்வுலகையே வென்று காட்டுகிறேன்"** என்று திருத்தந்தை 9 ஆம் பத்திநாதரும் செபமாலையின் பெருமை பற்றி எடுத்துச் சொல்லி இருக்கின்றனர்.

செபமாலையின் வாக்குறுதிகள்

செபமாலையை பக்தியோடு சொல் பவர்கள் பெற்றுக் கொள்ளும் நன்மைத்தனங்களையும் வாக்குறுதிகளையும் அன்னை மரியா புனித டோமினிக் சாவியோ வழியாகத் தந்துள்ளார்.

1. யார் யாரெல்லாம் பிரமாணிக்கமாகச் செபமாலை செபிப்பதன் மூலம் எனக்கு ஊழியம் செய்கிறார்களோ அவர்கள் நல்வரங்களைப் பெறுவர்.
2. செபமாலை சொல்வோர்க்கு விசேட பாதுகாப்பையும், மேலான கொடைகளையும் வாக்களிக்கின்றேன்.
3. நரகத்திற்கு எதிரான சக்தி வாய்ந்த ஆயுதம் செபமாலை. அது தீமையை அழிக்கவும், பாவத்தைக் குறைக்கவும் தப்பறைகளைத் தோற்கடிக்கவும் வல்லது.
4. செபமாலை நற்பண்புகளை விளைவிக்கும். நற்செயல்களைப் பெருகச் செய்யும் மனித உள்ளங்களை உலக ஈர்ப்புக்களிலிருந்தும் வீண் பெருமைகளிலிருந்தும் விலக்கி, அழியாச் செல்வங்கள் மீது பற்றுக் கொள்ளச் செய்யும். என்னே ஆச்சரியம்! கடவுளிடமிருந்து ஆன்மாக்களுக்கு ஏராளமான இரக்கத்தைப் பெற்றுத்தரும் இந்தச் செபமாலை வழியாக ஆன்மாக்கள் எப்படிப் புனிதம் அடைகின்றன பாருங்கள்.
5 செபமாலை செபித்து என்னிடம் பரிந்துரைக்கும் ஆன்மா அழிவதில்லை.
6. பக்தியோடு செபமாலை செபித்து மறையுண்மைகளின்படி நடப்பவர்கள் துரதிஸ்டங்களால் மேற்கொள்ளப்படுவதில்லை.
7. உண்மையான செபமாலைப் பக்தியுடையவர்கள் திருச்சபையின் அருளடையாளங்களைப் பெறாமல் இறப்பதில்லை.
8. செபமாலை செபிப்பதில் பிரமாணிக்கமாய் உள்ளவர்கள் வாழும்போது இறையொளியையும் அருளின் பலன்களையும் பெறுவர். இறக்கும் தறுவாயில் அவர்கள் விண்ணகத்தில் புனிதர்கள் அவையில் இடம்பெறும் பேற்றினைப் பெறுவர்.
9. செபமாலை செபிப்பதில் தங்களை அர்ப்பணித்தவர்களை நான் உத்தரிக்கும் நிலையிலிருந்து விடுவிப்பேன்.
10. செபமாலை சொல்வதில் பிரமாணிக்கமுள்ள குழந்தைகள் மேலான விண்ணக மகிமையைச் சந்திப்பர்.
11. செபமாலை செபித்தால் நீங்கள் கேட்கும் யாவற்றையும் பெற்றுக் கொள்வீர்கள்.
12. செபமாலைப் பக்தியை பரப்புபவர்கள் தங்கள் தேவைகளில் உதவிகளைப் பெறுவர்.
13. செபமாலையை பரிந்துரைப்பவர்களுக்காக இவ்வுலக வாழ்வின் போதும் இறப்பின் பொழுதும் விண்ணகப் படையை வைத்துக் கொள்ள என் மகனிடமிருந்து கேட்டுப் பெற்றுள்ளேன்.
14. செபமாலை செபிப்பவர்கள் அனைவரும் என் மகள்கள், என் மகன்கள் ஆவர். என் ஒரே அன்பு மகனின் சகோதரிகளும் சகோதரர்களுமாவர்.

முடிவாக,

நாம் ஒவ்வொருவரும் திருச்செபமலையைச் சொல்வதால் எமக்குக் கிடைக்கும் அருள்வளங்களையும் நன்மைத்தனங்களையும் ஆன்மீகம் சார்ந்த உரிமைகளையும் கருத்திற்கொண்டு திருச்செபமாலைப் பக்தியை முன்னெடுப்போம். திருச்சபை எமக்குத் தந்துள்ள களிகூர்ந்த, வியாகுல, மோட்சானந்த, ஒளியின் மறை உண்மைகளை அதற்கெனக் குறிப்பிட்ட தினங்களில் பக்தியோடு சொல்ல முன்வருவோம்.

வேகமான, விஞ்ஞான தொழில் நுட்ப உலகில் மூழ்கிப் போகாமல் ஒரு நாளில் முப்பது நிமிடங்களை என்றாலும் இப்பக்தி முயற்சிக்கு ஒதுக்குவோம். அமைதி இல்லாத நம்பிக்கை குறைந்த, வறண்ட உள்ளங்களில் கூட செபமாலை சொல்லுகின்றபோது இயேசுவோடு புனித மரியா மட்டுமல்ல வானகத் தந்தையாம் இறைவனும் தூய ஆவியாரும் நம்மோடு உறவு கொள்கின்றனர்.

திருச்செபமாலை சொல்வதன் ஊடாக கன்னிமரியாளின் பரிந்துரையையும் தூய தம திரித்துவத்தின் நிறைவான ஆசீர்வாதத்தையும், பாதுகாப்பையும் பெற்றுக் கொள்கின்றோம். திருச்செபமாலை சொல்வதை எமது அன்றாட வாழ்வின் கட்டாயக் கடமையாகக் கொள்ளவேண்டும். குடும்பமாக திருச்செபமாலையை ஓதுவதன் மூலமும் பல்வேறு பொதுக் கருத்துக்களுக்காக செபிப்பதன் மூலமும் எமது நம்பிக்கையை ஆழமாக்குவோம். ●

அன்னை மரியாவின் அற்புத பரிசு

செபத்தை இதயத் துடிப்பாகவும், தவத்தை அணிகலனாகவும், மௌனத்தை ஆடையாகவும், பன்னிரு விண்மீன்களை தன் மணி முடியாகவும் அணிந்த அன்னை மரியா அவனிக்கு அளித்த அற்புதமான பரிசு வல்லமையுள்ள செபமாலை. வழிவழியாக வரலாறு சந்தித்த அனைத்துப் போர்களிலும் திருச்சபைக்கு சாதகமாக வெற்றி பெற வைத்தது இந்த அற்புத செபமாலை. ஆண்டவரின் பிறப்பு – இறப்பு – உயிர்ப்பு என்ற மறையுண்மைகளுடன் இரண்டற இணைந்து பயணித்த மரியாளுடன் இணைந்து தியானித்துச் செபிக்கும் அரிய செபம் செபமாலை.

செபமாலை ஒரு மந்திரமாலை. மனதை ஒருமுகப் படுத்தி மரியன்னை வழி மாண்பு மிக்க இறைவனையும் நம்மோடு இணைக்க வைக்கும் அற்புத மணிமாலை. தாங்க முடியாத பிரச்சினையையும் தவிடுபொடியாக்கும் வல்லமை தருவது செபமாலை. அன்னை மரியா வழியில் அகிலத்தை ஆண்டவருக்கு அர்ப்பணித்துச் செபிப் போம். உலகை வெல்வோம். திருச்செபமாலையை அருங்காட்சிப் பொருளாக பக்குவப்படுத்தி வைப்பதற்குப் பதில் தினமும் அதனை ஓதுவோம். தாங்குவோம்.

காவலன் கலசம்

இல்லறம் காப்போம்

குடும்பத்தில் முரண்பாடுகளை கையாளுதல்

ஒரு குடும்பம் இவ்வுலகில் வாழும் பொழுது பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுக்கவேண்டி உள்ளது. பிரச்சினைகள் எழும் பொழுது அவற்றை புத்திசாலித்தனமாக கையாள்வதே மிகச்சிறந்து . திருமணமாகி கொஞ்ச நாட்களிலேயே பிரச்சினைக்கு மேல் பிரச்சினை வரலாம். இருவரும் வித்தியாசமாக யோசித்தும் செயற்படுவதும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். சிலசமயம் நன்பர்களிடமிருந்தும் உறவினர்களிடமிருந்தும் பிரச்சினைகள் வரலாம். எதிர்பாராத சம்பவங்களும் பிரச்சினைகளுக்கு காரணமாகலாம். குடும்ப வாழ்க் கையை பல கனவுகளோடு ஆரம்பித்திருப்பீர்கள் அதனால் பிரச்சினைகள் வரும்போது சோர்ந்து விடாதீர்கள்.

பிரச்சினைகளைப் பற்றிபேச நேரம் ஒதுக்குங்கள். அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களா? எப்படி உணர்கிறீர்கள்? என்பதை உங்கள் துணையிடம் வெளிப்படையாக சொல்லுங்கள்.

முரண்பாடுகளுக்கான ஒரு சில பின்னணிக் காரணங்கள்

1. தாழ்வு மனப்பான்மை.
2. செய்வினை பற்றிய மனக்குழப்பம்.
3. தனிநபர் ஆதிக்கம்.
4. குணமாக்கப்படாத கடந்தகால காயங்கள்.
5. நிறைவேற்றப்படாத தேவைகள்.
6. மனம்விட்டுப் பேசுவது குறைந்து செல்லுதல்
7. பேசுவதை முற்றாக தவிர்த்தல்
8. அடுத்தவரது வேண்டுகோளையோ கருத்தையோ செவிமடுத்து கேட்கமறுக்கும் நிலை.
9. மற்றவரின் கதையை கேட்க வெறுப்பான நிலை
10. ஒன்றாயிருப்பதைத் தவிர்த்துக் கொள்ளுதல்
11. ஒருவர் மற்றவர் மீதுகவனம் செலுத்துவதைவிடப் பிள்ளைகளில் கவனம் செலுத்துதல் அதிகரித்தல்.
12. குடித்தல்.போதைப்பொருள் பாவனைஅதிகரிப்பு.
13. சிறுசிறு பிரச்சினையைக் கூட பெரிதுபடுத்துதல்
14. சந்தேகம் வலுவடைதல்
15. யாரையார் அடக்குவது என்று போட்டியிடும் நிலை.
16. புரிந்துணர்வு அற்றுப்போதல்.
17. பரஸ்பர ஆர்வம், விருப்பம் குறைதல்.
18. திருமணவாழ்வு முக்கியமிழந்து போவதாக உணர்தல்.
19. வேறு ஆட்களோடு மிகநெருக்கமாக உறவாடுதல்.
20. நெருக்கமாக இருக்கும் நேரங்கள் குறைவடைதல்.
21. பரஸ்பர நம்பிக்கை அற்றுப் போதல்.
22. பொய் சொல்லுதல்.

பிரச்சினைகளை கையாள தடையாக இருக்கின்ற சில மனநிலைகள்

பிரச்சினைகளே இல்லை என்று மறுத்தல்

முரண்பாடுகள் வன்முறைகள் சிலவேளைகளில் அச்சுறுத்தலாக மாறுகின்றன. கையாள கடினமாகின்றது. இவ்வேளைகளில் ஒருசிலர் தங்களுக்கிடையே பிரச்சினை களே இல்லை என்று மறுத்து மூடி மறைத்து விடுவர்.

பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல் பின்வாங்குதல்

அச்சம் காரணமாக போதிய ஆற்றல், தன்னம்பிக்கை இன்மையால் பிரச்சினைகளை கையாளாமல் பின்வாங்கி அமைதியாக துன்பத்தில் வாழுதல்.

சரணாகதி அடைதல்

வாழ்க்கையில் எழும் பிரச்சினைகளை கையாள முடியாமல் தங்களுடைய தேவைகள், விருப்பங்கள், நோக்கங்கள், இலக்குகளை இலகுவாக விட்டுக்கொடுத்து சரணடைந்து விடுவர். இங்கு கோபம் குழிதோண்டி புதைக்கப்படுகின்றது. இதன் விளைவாக பல்வேறு விதமான உளவியல் தாக்கங்களை சந்திக்க நேரிடும்.

எல்லாரோடும் பிரச்சினைகளை பகிர்ந்து கொள்ளுதல்

எங்களுடைய பிரச்சினைகளை எல்லாரோடும் பகிர்ந்து கொள்வதாலும் பிரச்சினை பெரிதாகி எந்த விததீர்வும் எட்டப்படாமல் பிரச்சினை பிரச்சினைகளாகவே நீண்டகாலமாக நிலைத்து நிற்கின்றது. எம்மீது அக்கறை உள்ளவர்கள், அன்புள்ளவர்கள், ஆன்மீக வழிகாட்டிகள் என்போரிடம் மட்டுமே எமது பிரச்சினைகளை பகிர்ந்து கொள்வது மிகப் பொருத்தமாக அமையும்.

நரித்தனமாக நடக்காதீர்கள்

சுயநலநோக்கத்தோடு, போட்டி பொறாமை மனப் பான்மையோடு முரண்பாடுகளை அணுகு கின்ற பொழுதுஅது இன்னும் பெரிதாகி உறவை அழித்துவிடுகிறது. எனவே உள்ளொன்று வைத்து வெளியில் வேறொன்று பேசுகின்ற நரித்தனமான நடத்தையை கைவிட்டு விடவேண்டும். பிரச்சினைகளை ஒரு விளையாட்டுப் பொருட்களாக கருதாமல், துன்ப துயரத்தைப் புரிந்துகொண்டு பரிவிரக்கத்தோடு செயற்பட வேண்டும்.

சமரசம் செய்தல்

பிரச்சினைகளை புரிந்து கொண்டு, விட்டுக் கொடுத்து சமரசம் செய்வது ஓரளவு பிரச்சினைகளை தவிர்ப்பதை குறித்து காட்டுகிறது. இது ஒரு தற்காலிக தீர்வை தருகிறது. இது ஒரு நிரந்தரதீர்வு அல்ல.

தனிநபர் ஆதிக்கம்

குடும்பத்தில் பிரச்சினை எழுகின்ற பொழுது தனது முடிவுகள், தீர்வுகள், தீர்மானங்களை மற்றவர்கள் மீது திணித்தல். இங்கு தேவைகள் ஆசைகள் முழுமையாக நிறைவேற்றப்படமாட்டாது. மன அழுத்தம் அதிகரிக்கின்றது.

வன்முறை

பிரச்சினைகள் எழுகின்ற பொழுது வன்முறையை கையாண்டு குடும்பத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல். இது உடலுள தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தனது கோபத்தை திட்டித்தீர்த்து மற்றவர்களை மதிக்காத நிலைகாணப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட அனைத்து அணுகு முறைகளும் வெற்றி தோல்வியை அடிப்படையாக கொண்டு பிரச்சினைகள் அணுகப்படுகின்றன. இது நீண்டகால ஆரோக்கியமான உறவு பரிமாற்றத்திற்கு பெரும் தடையாக மாறிவிடுகின்றது.

கனிவாக அதே சமயத்தில் உறுதியாக இருங்கள் (Assertiveness)

ஒரு குடும்பத்தில் ஒரு தனிநபருக்கு ஏற்படுகின்ற பிரச்சினை அதை ஒரு தனிநபர் பிரச்சினையாக கருதாமல் அதை ஒரு குடும்ப பிரச்சினையாக கருதி குடும்பத்தில் இருக்கின்ற அனைவரும் குறிப்பிட்ட பிரச்சினைக்கு தீர்வுகாண ஆக்கபூர்வ மானபங்களிப்பை வழங்குகின்ற பொழுது பிரச்சினைகளுக்கு நிரந்தரமாக, நிலைத்து நிற்கக்கூடிய உறவை வலுப்படுத்தக்கூடிய தீர்வுகளை காணலாம்.இங்கு கருணையோடும் அதேசமயம் உறுதியான மனநிலையோடும் முரண்பாடுகளை அணுகவேண்டும்.

பிரச்சினையை இனம் காணுதல் (Identifying the problem)

பிரச்சினை என்ன? எது? என்பதை திட்டவட்டமாக வரையறை செய்து கொள்ளவேண்டும். பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து பார்த்து பிரச்சினையின் ஆணிவேர்களை புரிந்து கொள்ள வேண்டும்.

மிக ஆழமாக செவிமடுத்தல் (Deep Listening)

கணவனோ மனைவியோ பேசும் போது காது கொடுத்துக் கேட்பது மிக முக்கியம். அவர் சொல்ல வருவதைப் புரிந்துகொள்ள முயற்சிசெய்யுங்கள். கணவர் அல்லது மனைவி சொல்வது எரிச்சலாக இருந்தாலும் பொறுமையாக செவிமடுங்கள். முழு விவரத்தையும் கேட்பதற்குமுன் எந்த முடிவிற்கும்

அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)

வராதீர்கள். அவர் சொல்லுவதை மட்டுமல்லாமல் அவருடையமனதில் இருப்பதையும் புரிந்துகொள்ளுங்கள். உங்கள் துணையின் முகபாவனை,பேசும் தொனி,சைகை,ஆகியவற்றை கவனியுங்கள். பிரச்சினையினால் பாதிக்கப்பட்டமக்கள் இதை எப்படி அவர்கள் பிரச்சினையாக அனுபவிக்கிறார்கள் என்பதை ஆழமாக புரிந்து கொள்ளும் பொருட்டுமிக ஆழமாக பரிவிரக்கத்துடன் செவிமடுக்க வேண்டும்.

தங்களுடையதேவைகள், கருத்துக்கள், பார்வைகளை தெளிவாக முன்வைத்தல்.

மதிப்புடன் கூடியகருத்துப் பரிமாற்றம் தான் வாக்கு வாதங்களை தவிர்ப்பதற்கான இரகசியம். மற்றவர் புரிந்துகொள்ளும் வகையில் தங்களுடையதேவைகள், கருத்துக்களை தெளிவாக முன்வைக்க வேண்டும். எந்தவிதமான ஒழிவுமறைவு மின்றி உளப்பூர்வமாக தங்களது நிலையை எடுத்துக் கூறுவேண்டும். இங்கு அச்சத்திற்கோ தயக்கத்திற்கோ அடிபணியாமல் நேர்மையாக உறுதிப்பாட்டுடன் உண்மை நிலையை எடுத்துக்கூறல் வேண்டும்.

குமுச்சிந்தனை (Brainstorming)

இனங்காணப்பட்ட பிரச்சினைக்கு என்னென்ன தீர்வுகளை இடலாம் என்று குடும்ப உறுப்பினர்களிடையே தீர்வுகளை யோசனைகளை கேட்டறிதல். குழுச்சிந்தனை நல்ல தீர்வுகளை அடைய ஒரு சிறந்த வழி. எனவே அனைவரது பங்களிப்புகளையும் ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொருவரது ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளவேண்டும். தீர்ப்பிடாத மனநிலையை ஊக்குவித்து அனைவரும் பலன்பெறும் வகையில் ஆக்கபூர்வமான தீர்வு யோசனைகளை பெற முயற்சிக்க வேண்டும். இதய சுத்தியுடன் ஒவ்வொரு வரும் பங்களிப்புச் செய்கின்ற பொழுது நல்லாலோசனைகளை வெளிக்கொணர முடியும்.

கடவுளிடம் மன்றாடுதல்

கணவன், மனைவி இருவரும் சேர்ந்துதங்களுடைய பிரச்சினைகளை ஆண்டவரிடம் வெளிப்படுத்தி ஆண்டவருடைய திட்டத்தையும், விருப்பத்தையும், உய்த்துணர்ந்து செயற்பட முனைய வேண்டும். ஆழமான ஆன்மீக நாட்டம்,



இறைபற்று, இறையச்சம், இறை நம்பிக்கை என்பவை முரண்பாடுகளை தீர்க்கபேருதவியாக அமைகின்றது.

தீர்வு. (Solution)

மேலே வெளிக்கொணரப்பட்ட தீர்வு யோசனைக ளிலிருந்து ஒன்று அல்லது இரண்டு தீர்வு யோசனைகளை ஒன்றினைத்தோ அல்லது பல தீர்வுயோசனைகளை ஒன்றினைத்தோ பிரச்சினைகளுக்கு எது தீர்வாக அமையுமோ அதை குடும்ப உறுப்பினர்களின் பங்கு பற்றுதலோடு முடிவுசெய்தல்.

எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல். (Implementation)

ஒரு பிரச்சினையை எப்படி தீர்க்கலாம் என்று முடிவெடுத்த பின் அதன்படி செயற்படுவது மிக முக்கியம். இதற்கு கடின முயற்சி தேவை. இருவரும் சேர்ந்து முயற்சித்தால் நல்ல பயன் கிடைக்கும். யார் எதைசெய்வது? எப்படி செய்வது? எந்த கால வரையறைக்குள் செய்வது? என்பதை தீர்மானித்து பொறுப்புக்கள் பங்கிடப்பட வேண்டும். அனைவருடைய ஆக்கபூர்வமான பங்களிப்பையும் ஊக்குவிக்க வேண்டும்.

மீளாய்வுசெய்தல் (Evaluation)

நடைமுறைப்படுத்தப்பட்ட தீர்மானம் எவ்வளவு தூரம் வெற்றி அளித்துள்ளது, எவ்வளவு தூரம் பயன்பட்டுள்ளது என்பதை அறிவியல் ரீதியாக அலசி ஆராய்ந்துபார்த்தல் வேண்டும்.முன்னேற வேறு வழியேதும் இருந்தால் அவற்றை தெளிவுடன் சிந்தித்து செயற்படல் வேண்டும்.

திருமண வாழ்வில் தென்றல் வீசுவதும், புயல் அடிப்பதும் உங்கள் இருவர் கையிலேதான் இருக்கின்றது. நடந்து முடிந்தசம்பவ விடயங்களையே கிளறிக் கொண்டிருக்காமல் நடக்கப் போகிற விடயங்களைப் பற்றியோசியுங்கள். இருவரும் சேர்ந்து செயற்பட்டால் எந்தவொரு பிரச்சினையையும் வெற்றிகரமாக கையாளமுடியும்.

பிரச்சினையா?

குழப்பமின்றி பேசுங்கள்
- கூச்சலிட்டு மோதாதீர்கள்

உறுதி காட்டுங்கள்
- பிடிவாதம் காட்டாதீர்கள்

விவரங்கள் சொல்லுங்கள்
- தர்க்கம் விரும்பாதீர்கள்

பேசித் தீர்த்திடுங்கள்
- பேசியே வளர்க்காதீர்கள்

உடனே முடிவெடுங்கள்
- ஒத்திப் போடாதீர்கள்

நடப்பதைப் பாருங்கள்
- நடந்ததைக் கிளறாதீர்கள்

கலகலப்பாய் இருங்கள்
- கைகலப்பு வேண்டாம்

பிரச்சினைகள் கூட
உங்களை அணுக யோசிக்கும்

(3ம் பக்கத் தொடர்ச்சி...)

துணிச்சலோடு முன்னெடுத்து அமுல்படுத்தி வெற்றிகண்டுள்ளார் என்பதை நாம் பெருமையோடு கூறமுடியும். எதிர்ப்புக்களையும், சவால்களையும் கண்டு அஞ்சாதவராக திட மனத்துடன் அவர் ஆற்றிவரும் பணிகளால் எமது மறைமாவட்டம் இப்போது எழுச்சி கண்டு வருவதை காணமுடிகிறது.

இதுமட்டுமன்றி, ஆயர் அவர்கள் எமது மறைமாவட்டத்திற்கும் அப்பால் சென்று இலங்கையின் ஏனைய தமிழ் மறை மாவட்டங்களின் ஆயர்களோடு இணைந்து இலங்கையின் தமிழ் திருஅவையை அடையாளப்படுத்தி, ஒன்றுபட்ட, ஒருவருக்கொருவர் பரஸ்பர உறுதுணை வழங்கக்கூடிய வழிமுறைகளிலும் ஈடுபட்டிருப்பது எதிர்காலத்தில் இலங்கையில் ஒரு தமிழ் மேல் மறைமாவட்டம் உருவாகி, தமிழ் இறைமக்களின் நலன்கள் அதிகரிக்க வழிசமைக்கும் எனபதையும் மகிழ்ச்சியோடு இவ்வேளையில் நினைத்து எமது ஆயர் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் ஒத்துழைப்பையும் தெரிவித்து நிற்கின்றோம்.

ஆயர் அவர்களை அபிஷேகம் செய்த தூய ஆவியார் தொடர்ந்தும் அவரை தனது அருளால் நிறைத்து எமது மறைமாவட்டத்திலும், இலங்கைத் தமிழ் திரு அவையிலும் இறைவனின் திருவுளம் நிறைவேற அவரை பயன்படுத்த வேண்டுமென்று இறையாசீர் வேண்டுகின்றோம். யாழ்ப்பாண மறைமாவட்டக் குருக்கள், துறவறத்தார், பொதுநிலை இறைமக்கள் அனைவர் சார்பாகவும் எமது பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

அருட்பணி. ப. யோ.ஜெயரட்ணம்
யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர்



கிளறேசியன் மறை பணி சபையின் ஆன்மீக இயக்குநர் யாழ் வருகை

கிளறேசியன் மறைபரப்புச் சபையின் ஆன்மீக இயக்குநர் அருட்பணி கொன்சாலோ பெர்னாண்டஸ் சாள்ஸ் cmf அடிகளார் எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார். யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் குருக்கள், துறவிகள், பொதுநிலையினரை இவ்வருகையின் போது அடிகளார் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

புனித வின்சன் டி போல் சபை நடாத்தும் சித்திரப் போட்டி

புனித வின்சன் டி போல் தனது அருங்கொடையின் 400 ஆவது அகவையினை முன்னிட்டு சித்திரப் போட்டியினை நாடளாவிய ரீதியில் நடத்தவுள்ளது.

கருப்பொருள் "எனது அயலான் யார்" (லூக்.10: 25-37)

வயதெல்லை A **பிரிவு : 12-15** B **பிரிவு : 16- 28**

A3 **அளவான சித்திரத்தாளில் பெஸ்ரல், நீர்ச்சாயம், எண்ணெய்ப் பெஸ்ரல் போன்ற நிறப்பூச்சுக்களைப் பயன்படுத்தலாம்.**

தங்கள் ஆக்கங்களை ஒப்படைக்கவேண்டிய இறுதித் திகதி 2018 ஆனி 15. பங்குத் தந்தை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். சித்திரங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி : தேசிய இயக்குநர், புனித வின்சென்டி பவுல் சங்கம், பொதுநிலையினர் மற்றும் குடும்ப அப்போஸ்தலிக்கப் பணியகம், இலக்கம் 658, பேராதனை வீதி, கண்டி.

2ம் ஆண்டு நினைவஞ்சலியும் (27.03.2016)
63ம் வது பிறந்த நாள் நினைவும் (11.05.1955)

பிறப்பு		இறப்பு
11		27
-		-
05		03
-		-
1955		2016

அமரர்

கனகராஜா மரியகொறற்றி (நேசராணி)

" சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள் "

நாவலர் வீதி
நாவாந்துறை

(AD/44)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

14ம் ஆண்டு நினைவஞ்சலி

S.A.E. இரட்ணராஜா

பிறப்பு	இறப்பு
27.05.1935	20.05.2004

குடும்பத்தில் சுடர் ஒளியாய்
சேவைதனில் ஓர் ஆசானாய்
ஊரினில் கலைவித்தகனாய் வாழ்ந்து
இறைபதமடைந்து தூயவரானீர்
இறைஞ்சுகின்றோம் உமக்காக!

AD45

இவரது அன்பில் நிலைத்திருக்கும் மனைவி, திருமதி இ.இரட்ணராஜா, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கரம்பொன்.

பாதுகாக்கப்படும் கத்தோலிக்க ஆவணங்கள்

கத்தோலிக்க சமய ஆவணங்கள் பல போர்க்காலப் பகுதியில் அழிவடைந்த நிலையில், மிகுதியாகக் காணப்பட்ட அவணங்கள் யாழ் ஆயர் இல்லத்தில் ஆவண பாதுகாப்புப் பகுதியில் பாதுகாப்பாக வைக்கப் பட்டிருந்தன.

1775 ஆம் ஆண்டு தொடக்கம் 1948 ஆம் வரை யான காலப்பகுதியை உள்ளடக் கியதாக சிதைவடைந்து காணப் பட்ட இந்த ஆவணங்களை யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம் (Alliance Francaise de Jaffna) மற்றும் பிரிட்டிஸ் நூலகம் (British Library, London) என்பன இணைந்து பாதுகாக்கும் நோக் கோடு டியிற்றல்லைஸ் (digitize) செய்து வருகின்றது.

இச்செயற்திட்டம் கடந்த மூன்று வருட காலமாக நடை பெற்று வருவதுடன் தற்போது நூறாயிரம் பக்கங்களுக்கு மேலாக இவை டிஜிற்றல்லைஸ் செய்யப்பட்டு eap.bl.uk என்ற இணையத்தள முகவரியில் பதி வேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஊடாக பாதுகாக்கப்படாமல் இருந்த கத் தோலிக்க ஆவணங்கள் தற்போது பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அழிவடைந்து வரும் ஆவணங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் மேற்படி இரு நிறுவனங்களும் யாழ் பிர தேசத்தில் செயற்றிட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ் பிரெஞ்சு நட்புற வுக்கழக நிர்வாகியான ஜெராட் றொபுசோன் இதனைத் தலைமைதாங்கி மேற்கொண்டு வருகின்றார். இவர் பிரான்ஸ் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண் டவர். யாழ் நாகரில் பத்து வருடங்களுக்கு மேலாக தனது செயற்பாட்டை ஆற்றி வரும் இவர் பிரான்ஸ் நாட்டவராக இருப்பினும் மிகத் தெளிவாக தமிழ் பேசக்கூடிய ஆற்றல் கொண்டவர். கத்தோலிக்கதிருச் சபையின் மீது மிகுந்த பற்று உடையவராக யாழ் மறை மாவட்ட ஆயர் இல்லத்துடன் இணைந்து இச் செயற்திட் டத்தை இவர் முன்னெடுத்து வருகின்றார்.

சாத்தானின் சோதனைக்கு எதிராகப் போராட அழைப்பு

சாத்தானின் மயக்க வலைக-ளில் சிக்கிக் கொள்ளாமல் அவை குறித்து விழிப்பாயிருக்குமாறும் சாத்தானின் சோதனைகளை எதிர்த்துப் போராட வேண்டு மென்றும் திருத்தந்தை பிரான் சிஸ் தனது மறையுரையில் கூறியுள்ளார்.

சாந்தா மார்த்தா இல் லச் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் யோவான் நற்செய்தி 16: 5 -11 வரையுள்ள வாசகத்தை மையப்படுத்தி மறையுரையாற்றிய வேளை, கட்டுண்டுள்ள வெறிநாயைத் தடவுகையில் அது கடித்துவிடு வது போல தீய நெறிக்கு இட்டுச்செல்லும் சாத்தானோடு பேசும்போது அது மிகவும் ஆபத்தானது என்று கூறினார்.

சாத்தானிடம் நெருங்கிச் செல்ல வேண்டாமெனவும், நம்மை வீழ்த்துவதற்குச் சாத்தானுக்கு நன்றாகவே தெரியும் ஆத லால் நாம் சோதனையில் வீழ்ந்துவிடாமல் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் அழைப்பு விடுத்த திருத்தந்தை இயேசு கூறுவது போல, நாம் விழிப்பாயிருந்து, நோன்புடன் செபம் செய்வதே சோதனை-களை வெல்வதற்கான வழி என்றும் கூறினார்.

பிள்ளைகள் பயப்படும் போது தாயிடம் செல்வதுபோல நாமும் ஆன்மீக வாழ்வில் கலங்கி நிற்கையில் இறைவ னின் அன்னையிடம் அடைக் கலம் தேடுவோம் எனவும் திருத்தந்தை பிரான்சிஸ் தன் மறையுரையில் மேலும் தெரி வித்தார்.

வந்து பாருங்கள்

அழகான சொரூபங்கள்
முதல்நன்மை அன்பளிப்புக்கள்
மிக மலிவான விலையில்

புனித வளன் கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையத்தில்

9ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு		உதிர்வு
13		18
-		-
05		05
-		-
1968		2009

குருத்துவம்
14.05.2003

அருட்தந்தை ம. ததேயுஸ் சறத்ஜீவன்

" நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கின்றார்
நானும் தந்தையை அறிந்திருக்கின்றேன்.
அது போல் நானும் என் ஆடுகளை அறிந்திருக்கின்றேன்.
என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன.
அவைகளுக்காக என் உயிரைக் கொடுக்கின்றேன். "

(John.10:14-15)

இவரின் ஆன்ம சாந்திக்காக 18-05-2018 வெள்ளிக்கிழமை அன்று காலை 5.30 மணிக்கு யாழ்.புனித மரியன்னை பேராலயத்திலும், 18-05-2018 வெள்ளிக்கிழமை அன்றுகாலை 11.00 மணிக்கு புனித பற்றிமா அன்னை ஆலயம், உருத்திரபுரத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

உருத்திரபுரம் மன்னுக்கிருசீரான்
புனித பற்றிமா அன்னை ஆலயம்

தகவல்
குடும்பத்தினர்
இல. 252 பற்றிமா வீதி,
யாழ்ப்பாணம்.

3ம் ஆண்டு நினைவலைகளில்

மண்ணில்		விண்ணில்
02		13
-		-
12		05
-		-
1943		2015

அமரர் அருள்ராசா ரோசமலர்

" உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான் "

நாவாந்துறை

(AD/43)

அன்பைச் சுவைத்த
கணவன், பிள்ளைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள நல்லாயன் சிற்றாலயத்தில் நல்லாயன் திருச்சொரூபத்தை யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அண்மையில் திறந்துவைத்ததுடன் பல்கலைக்கழக சமூகத்தினருடன் இணைந்து திருப்பலியும் ஒப்புக்கொடுத்தார்.

நயினாதீவு புனித அந்தோனியார் ஆலய திருநாள் திருப்பலி அண்மையில் யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் பங்குமக்களால் ஆயர் அவர்களுக்கு மகத்தான வரவேற்பும் அளிக்கப்பட்டது.

புனித மடுத்தீனார் குருமட விளையாட்டுப்போட்டி

யாழ் புனித மடுத்தீனார் சிறிய குருமட மாணவர்களுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி 29.04.2018 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில் குருமட அதிபர் அருட்பணி. பாஸ்கரன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. ஜெபரட்ணம் அடிகளார் பிரதம விருந்தினராகவும், புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி. திருமகன் அடிகளார் கௌரவ விருந்தினராகவும், ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு.அகஸ்டீன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

டிஜிற்றல் மயமாகும்

புனித வளன்

கத்தோலிக்க அச்சகம்

புதுப்பொலிவு பெறும்

பாதுகாவலன் மண்டபம்

உங்கள் சகல விதமான குடும்பக் கொண்டாட்டங்களையும்
கொண்டாடி மகிழ

இல.360,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 222 2378 / 021 222 9041

யாழ் பல்கலைக்கழக பேரவை அங்கத்தவராக அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம் அடிகளார் நியமனம்.



யாழ் பல்கலைக்கழகத்தின் பேரவை அங்கத்தவராக புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரும், பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தையும் ஆகிய அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம் அடிகளார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.அடிகளாருக்கு பாதுகாவலன் செபத்துடன் இணைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றது.

பரந்தன் பங்கில் குருதிக்கொடை நிகழ்வு

பரந்தன் பங்கு புனித அந்தோனியார் இளையோர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இரத்ததான நிகழ்வு பங்குத்தந்தை அருட்பணி.றெனோல்ட் ஜோர்ஜ் அடிகளாரின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் மத வேறுபாடின்றி இளையோர்கள் இணைந்து குருதிக்கொடை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

டோக்கியோ சீமேந்து நிறுவனத்தின் ஆதரவில் உரும்பிராயில் அமைக்கப்படவுள்ள 25 வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல்லை யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அண்மையில் நாட்டி வைத்து வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

புங்குடுதீவு பங்கில் கடல்வழி சிலுவைப்பாதை கடந்த புனிதவாரத்தில் நடை-பெற்றது. இச்சிலுவைத் தியானப்பயணம் புங்குடுதீவு கடற்கரை புனித சூசையப்பர் சுரூப முன்றலில் இருந்து கடல் வழியாக ஆரம்பமாகி நயீனாதீவு துறைமுகம் சென்று பின்னர் அங்கிருந்து கால்நடையாக நயீனாதீவு புனித அந்தோனியார் ஆலயம் சென்றடைந்தது. இச்சிலுவைத் தியானத்தை புங்குடுதீவுப் பங்குத்தந்தை செபஜீவன் அடிகளார் நெறிப்படுத்தியிருந்தார்

புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளர் அருட்பணி. செ.எயின்சிலி றொஷான் அடிகளாரின் தலைமையில் பணியாளர்கள் இணைந்து அண்மையில் நுவரெலியா, கண்டி ஆகிய இடங்களுக்கு மகிழ்வூட்டும் பயணம் மேற்கொண்டனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.